Registered as a Newspaper


# உதயன்

சுடர் : 36 கதிர் : 339 | வெள்ளிக்கிழமை | ஐப்பசி 19 ஆம் நாள் 05 நவம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111



## இந்தியாவிலிருந்து வந்தது திரவ உரம்

கொழும்பு, நவ. 5
இந்தியாவில் இருந்து 'நனோ நைட்ரஜன் யூரியா' திரவ உரம் இலங்கைக்கு இரண்டு கட்டங்களாக நேற்றுக்காலை எடுத்துவரப்பட்டது. இந்திய விமானப்படையின் சரக்கு விமானங்களில் இது கொண்டுவரப் 15



மீண்டும் எகிறும் தொற்று

## 592 பேருக்கு கொரோனா

### 15 பேர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 5
இலங்கையில்நேற்று 592 பேர்கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்தத் தொகை முன்ன 15

# வெடுக்குநாறி மலையில் விகாரையின் சிதைவுகளாம்!

### இப்போதுதான் இந்து வழிபாடு என்று கதைவிடுகிறார் பணிப்பாளர்நாயகம்

வவுனியா, நவம்பர் 5
வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் அண்மைக்காலமாகவே இந்துக்கோவில் என்றவகையில் பூசைகள் நடைபெற்றுவருகின்றன. எனினும் அங்கு பௌத்த விகாரைகளின் சிதைவுகளே காணப்பட்டன என்று, தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர்நாயகம் அனுர மனதுங்க தெரிவித்தார். 15



## போதைப்பொருள்களுடன் காரில் சென்ற இருவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 5
போதைப்பொருள் மாத்திரைகள், வாள் என்பவற்றுடன் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் கோவில் வீதியில், யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு தலைமை பொலிஸ் அதிகாரி சி.ஐ.பிரான்சிஸ் தலைமையில் மேற் 15

## ஹைஏஸிலும் கஞ்சா கடத்தல்

துரத்திப்பிடித்தது பொலிஸ்

யாழ்ப்பாணம், நவ. 5
மாதகல் பகுதியில் 'ஹைஏஸ் வாகனத்தில் கஞ்சா போதைப்பொருளை கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் வாகனத்துடன் ஒருவரை இளவாலைப் பொலி 15

கொழும்பு – மன்னார் பஸ்ஸில்

## 'ஐஸ்' போதைப்பொருள் கடத்திய இருவர் கைது

தலைமன்னார், நவ. 5
தலைமன்னார் - கொழும்பு அரச பேருந்தில், 'ஐஸ்' ரக போதைப்பொருளுடன் பயணித்த இருவர் மன்னார் பொலி 15

## மண்ணித்தலை சிவன்கோவிலை பாதுகாக்கும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 5
3000 ஆண்டுகள் பழமை வாய்ந்த சோழர்காலத்தைச் சேர்ந்த, பூநகரி மண்ணித்தலை சிவன் கோவிலை பாதுகாப்பதற்குரிய பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப் 15





## 13 ஆல் பயனில்லை

வவுனியா, நவ. 5
"13ஆவது திருத்தம் ஒற்றையாட்சி அரசின்கீழ் உள்ளது. அது தமிழர்களைப் பாதுகாக்காது." என்று வவுனியாவில் 1722 ஆவது நாளாக தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.
அவர்கள் தீபாவளி தினமான நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதன் போது அவர்கள் 15




விளையாட்டு வினையானது

## சிறுவர்கள் கைகலப்பு 11 பேர் கைதாகிப் பிணை

யாழ்ப்பாணம், நவ. 5
சிறுவர்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் காயமடைந்தார். அதனையடுத்து 11 சிறுவர்கள் கைதுசெய்யப்பட்டு பிணைமுறி 15

முச்சந்தி முரளி

"கேக்கிறவன் கேனையன் எண்டால் வெடுக்குநாறி மலையில புத்தரின்ர கழிப்பறை இருந்ததெண்டும் சொல்லுவினம்"





## விலைக் கட்டுப்பாடு பற்றிய கொள்கை இருக்கவேண்டும்

சாடுகின்றது எதிர்க்கட்சி

கொழும்பு, நவ. 5
"விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தனது கடமைகளைச் சரியாகச் செய்ய வேண்டுமெனின், அரசாங்கம் விலைக் கட்டுப்பாடு தொடர்பான 15

# வீட்டுத்திட்டத்தில் முறைகேடு விளக்கம் கோருகிறார் அங்கஜன்

## சாவகச்சேரி பிரதேச செயலருக்கு கடிதம் அனுப்பினார் மாவட்டச் செயலர்

**யாழ்ப்பாணம், நவ. 5**

**கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு அமைச்சால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வீட்டுத் திட்டத்தில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் அது தொடர்பில் விளக்கமளிக்குமாறும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் அங்கஜன், மாவட்டச் செயலர் க.மகேசன் ஊடாகக் கோரியுள்ளார்.**

வீட்டுத்திட்டத்தில் அரசியல் தலையீடு காரணமாக முறைகேடுகள் இடம்பெற்றன. இதனை உதயன் அம்பலப்படுத்தியிருந்தான். இதனையடுத்து பட்டியல்கள் மீளாய்வு செய்யப்பட்டன. சீர் செய்யப்பட்ட பட்டியல்களிலும் தங்களின் ஆதரவாளர்களின் பெயர்களை உட்புகுத்த அரசியல்வாதி ஒருவர் பகீரதப் பிரயத்தனம் செய்திருந்தார். சாவகச்சேரி பிரதேச செயலர் அதற்கு இடமளிக்கவில்லை.

இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களின் பட்டியலும் இணைத் தலைவர் அங்கஜனால் அனுமதிக்கப்பட்டது. சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் பட்டியல் மாத்திரம் அனுமதிக்கப்படவில்லை. அந்தப் பிரதேச செயலகப் பயனாளிகள் தெரிவு தொடர்பில் சுயாதீன விசாரணைக்குழு அமைத்து விசாரிக்குமாறு அவர், மாவட்டச் செயலரைக் கோரியிருந்தார்.

அதற்கு அமைவாக விசாரணையை முன்னெடுத்த குழுவினரால் இறுதிப் பட்டியலில் இருந்து 75பேர் நீக்கப்பட்டனர். இந்தக் குழுவின் அறிக்கைக்கு அமைவாக ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன் கடந்த மாதம் 26ஆம் திகதி மாவட்டச் செயலருக்கு தனது அவதானங்களை அனுப்பி வைத்துள்ளார். அதற்கு அமைவாக கடந்த மாதம் 27ஆம் திகதி மாவட்டச் செயலர் க.மகேசனால், சாவகச்சேரி பிரதேச செயலருக்கு விளக்கம் கோரும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்குரிய விளக்கங்களை முதலாம் திகதிக்கு முன்னர் முன்வைக்குமாறு மாவட்டச் செயலர் கோரியிருந்தபோதும், பிரதேச செயலர் இது வரை விளக்கமளிக்கவில்லை என்று தெரியவருகின்றது.

அதேவேளை, சாதாரணமாக விளக்கமளிப்பதற்கு 14 நாள்கள் அவகாசம் வழங்கப்படுகின்றபோதும் மேற்படி விடயத்தில் அவ்வாறு கால அவகாசம் வழங்கப்படவில்லை. (ஒ,5)

# கேரளக் கஞ்சாவுடன் இரண்டு பேர் கைது!


கிளிநொச்சி, நவ. 5

வாகனமொன்றில் சூட்சுமமாக மறைத்து எடுத்துச்செல்ல முற்பட்ட கஞ்சாவுடன் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது மேற்படி கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர். மீட்கப்பட்ட கஞ்சா 10 கிலோ 845 கிராம் எடையுள்ளது. கைது செய்யப்பட்ட நபர்கள் இருவரும் சகோதரர்கள் எனவும், ஒருவர் சாந்தபுரம் பகுதியைச் சேர்ந்தவர் எனவும், மற்றயவர் பாரதிபுரம் பகுதியை சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-6)





# உடைமையில் கஞ்சா இளைஞர் கைதானார்

வவுனியா, நவ. 5

வவுனியா மதகுவைத்தகுளம் பகுதியில் கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் செட்டிகுளம் சிறப்பு அதிரடிப் படையால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா மதகுவைத்தகுளம் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான வகையில் நபர் ஒருவர் நிற்கின்றார் என்று சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கையை மேற்கொண்ட போது மேற்படி இளைஞர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து ஒன்றரைக் கிலோவுக்கும் அதிகமான கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. (ம-110)

# அங்கஜன் அன்று சொன்னதும் இப்போது சொல்லுவதும்

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் வீட்டுத் திட்டத்தில் அரசியல் தலையீடு தொடர்பிலும், முறைகேடுகள் தொடர்பிலும் ஊடகங்கள் சுட்டிக்காட்டியபோது அதனை மறுத்து, அரச அதிகாரிகளை ஊடகங்கள் மதிப்பிறக்கம் செய்கின்றன என்று குற்றம் சுமத்திய யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் இ.அங்கஜன், இப்போது வீட்டுத்திட்டத்தில் இடம்பெற்ற குழறுபடிகள் தொடர்பில் பிரதேச செயலரிடம் விளக்கம் கோரியுள்ளார். வீட்டுத்திட்டத்தில் அரசியல் தலையீடு காரணமாக தகுதியான பயனாளிகள் உள்வாங்கப்படவில்லை என்று உதயன் உள்ளிட்ட ஊடகங்கள் சுட்டிக்காட்டியிருந்தன. இது தொடர்பில் கடந்த ஜூலை மாதம் 17ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் அங்கஜன் ஊடக சந்திப்பு நடத்தியிருந்தார். அந்தச் சந்திப்பில்,

**'வீட்டுத்திட்டம் தொடர்பில் கடந்த சில நாள்களாக சர்ச்சைகளை இந்த ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன. அரசியல் நோக்கங்களுக்காகவும் தனிப்பட்ட காரணங்களுக்காகவும் அவை அதைச் செய்கின்றன. யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படும் வீட்டுத் திட்டத்துக்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்வது புள்ளியிடல் முறையில்தான். இது தொடர்பில் மாவட்டச் செயலர் சுற்றறிக்கை அனுப்பி வைத்துள்ளார்.**

**இந்த வீட்டுத் திட்டங்களுக்கு நாங்கள் பயனாளிகளை பரிந்துரைக்கலாம். வேறு பல அரசியல்வாதிகளும் அவ்வாறு பரிந்துரைத்துள்ளனர். இந்தப் பரிந்துரைகளை வைத்து கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பயனாளிகளுக்கு புள்ளியிடுவார்கள். அதனடிப்படையில்தான் பயனாளிகள் தெரிவாகுவார்கள். இந்தத் திட்டத்தில் எந்த முறைகேடும் இல்லை.**

**அரசியல் நோக்கங்களுக்காக அரசியல்வாதிகள் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது அவர்களின் கீழ்த்தரமான அரசியலாக இருக்கட்டும். அரச உத்தியோகத்தர்களின் தரத்தைக் குறைக்கக் கூடாது. பொதுமக்கள் பிரதேச செயலகங்கள் மீது நம்பிக்கை கொண்டு செயற்படுகின்றார்கள். அவர்களுடைய தரத்தைக் குறைத்து அபாண்டமாக குற்றம் சுமத்துகின்றார்கள். அதனை நிரூபிக்கவேண்டும்'** என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் இ.அங்கஜனின் வேண்டுகோளுக்கு அமைவாக சாவகச்சேரி பிரதேச செயலக வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவு தொடர்பில் ஆராய சுயாதீன விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் இ.அங்கஜன் தனது அவதானங்களை மாவட்டச் செயலருக்கு அனுப்பி, அது தொடர்பில் பிரதேச செயலரிடம் விளக்கம் கோரினார். அங்கஜனால் அனுப்பி வைக்கப்பட்ட விளக்கம் என்று மாவட்டச் செயலர் க.மகேசன் குறிப்பிட்டுள்ளதாவது,

**'கிராம மட்ட உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் உரிய வகையில் கண்காணிக்கப்படவுமில்லை வழிப்படுத்தப்படவுமில்லை. சுற்றறிக்கைகள், நியமங்கள், விடயப்பரப்புக்கள் எவையும் தெரிவின்போது பின்பற்றப்படவில்லை. வீடமைப்பு நியமங்களுக்கு மாறாக செயற்படும் உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றமை.**

**வீடமைப்பு பட்டியலை மாவட்டச்செயலகம் கோரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேவைக்கு ஏற்ற வகையில் (5 அல்லது 10) விண்ணப்பதாரரின் பெயரை மென்பிரதியாக மின்னஞ்சல் செய்யுமாறு கிராம மட்ட உத்தியோகத்தர்களுக்கு சமூக வலைத்தளங்களால் இச்செய்தியை அனுப்புவதனால் அங்கு முறையான தரவுத்தளமின்மை தெரியவருகின்றது. புள்ளி வழங்கலில் (மாற்றுவலு, புனர்வாழ்வளிக்கப்பட்டவர், பெண்தலைமைத்துவம் போன்றவை) திரிபடையச்செய்து குழப்பநிலை ஏற்படுத்தி பலதரப்பை சிரமங்களுக்கு உட்டுத்தியமை.**

**தகுதியான விண்ணப்பதாரிகளின் ஆவணங்கள் பரீட்சித்துப்பார்க்காமை, அவ்வாறு ஆவணங்கள் பரீட்சித்துப் பார்த்ததை மேலதிகாரிகள் உறுதிப்படுத்தாமை. ஒரு சில கிராம மட்ட உத்தியோகத்தர்களின் தன்னிச்சையான செயற்பாடுகள் நிதி ஒதுக்கப்படாது கட்டுமானப்பணிகளை ஆவண ரீதியில் ஊக்குவித்தமை. இதனால் தற்போது குழுவால் தகுதியற்றவர்கள் எனத் தெரிவிக்கப்பட்ட குடும்பத்தின் நிதி நட்டத்தின் பொறுப்புக்கூறல் எவ்வகையில் அமையப்போகின்றது? தகுதியற்ற விண்ணப்பதாரிகளை முற்றிலும் சுற்றறிக்கைக்கு மாறாக தகுதியாக்க முற்பட்டமை. விடயங்களை மாதாந்த அறிக்கைகளாக கிராம மட்ட உத்தியோகத்தர்களிடம் அறிக்கை பெற்று ஆய்வு செய்யப்படாமை.**

**அரச நிதி உரிய தகுதியான பயனாளிக்கு சென்றடைவதை தடுத்தது மட்டுமன்றி தகுதியற்றவரைப் பட்டியலில் உட்புகுத்தியதன் மூலம் அரச நிதியின் வினைத்திறனை கேள்விக்கு உட்படுத்த முனைந்தமை.**

**தமது தவறுகளை மறைக்க சில ஊடகங்களின் உதவியுடனும், சமூகவலைத்தளங்களிலும் தவறான கருத்துக்களைப் பரப்பி விடயங்களை திசைதிருப்ப முனைந்தமை அல்லது மோசடியில் ஈடுபட முனைந்தமை அல்லது அரசநிதி மூலம் தனிப்பட்ட இலாபத்தை அடைய முற்பட்டமை.**

**இச்சுயாதீன அறிக்கை வெளிவர முன்பு பலதரப்பாலும் உயர்ந்த புள்ளி பெற்றால் வீட்டுத்திட்டம் வழங்கப்படவேண்டும் என்ற கருத்தே ஓங்கியிருந்தது. சரியான நியாயப்படுத்தல் உறுதிப்படுத்தபடவேண்டும் என்ற கருத்து வலுக்குன்றியிருந்தமையால் ஊடகங்களும் அலுவர்களும் ஏனைய தகுதியீனங்களை மறைத்துக்கொண்டமையால் உண்மையில் பாதிக்கப்பட்ட தரப்புக்களும், மக்களும் தமக்குரிய அரச உதவியைப் பெறமுடியாது அலைக்கழிக்கப்பட்டு கண்டும் காணாமலும் விடப்பட்டனர். அதேநேரம் தகுதியற்ற பலர் உதவிகளைப்பெற்றமையால் மாவட்டத்தின் வீட்டுத்திட்டத் தேவை வருடாவருடம் குறைவதற்குப்பதிலாக அதிகரித்தே செல்வதைக் காணமுடிகின்றது'** என்று குறிப்பிட்டுள்ளார்.

*வீட்டுத் திட்டம் தொடர்பில் சர்ச்சைகளை ஊடகங்களே உருவாக்குவதாக அன்று தெரிவித்த அங்கஜன், இப்போது அதில் நடைபெற்ற முறைகேடுகளை தானே வெளிப்படுத்தியிருக்கிறார்.*

*பயனாளிகள் தெரிவு புள்ளியிடல் மூலமே நடக்கின்றது என்று அன்று தெரிவித்த அங்கஜன், இப்போது அது மாத்திரம் போதுமானது அல்ல என்று கூறுகின்றார்.*

*அரச அதிகாரிகளின் தரத்தைக் குறைத்து பிரதேச செயலகங்கள் மீதான மக்கள் நம்பிக்கையை சிதைப்பதாக ஊடகங்கள் மீது அன்று குற்றம் சுமத்திய அங்கஜன், தனது அவதானிப்பில் இப்போது கூறியிருப்பது மாத்திரம் அரச அதிகாரிகளின் தரத்தையும், அலுவலர்கள் மீதான நம்பிக்கையையும் சிதைக்காதா?*

*ஊடகங்கள் தாங்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கவேண்டும் என்று அன்றுகூறிய அங்கஜன், இன்று அவை அனைத்தையும் தானே நிரூபித்துள்ளார்.* (ஒ.5)



சீனி, பருப்பு உட்பட பல பொருள்களுக்கு

# கட்டுப்பாட்டு விலை நீக்கம் அரசின் தீபாவளிப் பரிசு!!!

**கொழும்பு, நவ. 5**

**சீனி, பருப்பு, கோழி, உருளைக்கிழங்கு மற்றும் ரின் மீன் உள்ளிட்ட 17 அத்தியாவசியப் பொருள்களுக்கு விதிக்கப்பட்டிருந்த விலைக் கட்டுப்பாட்டை நீக்கி நுகர்வோர் விவகார அதிகாரசபை விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.**

கடந்த செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி வெள்ளைச் சீனி மற்றும் பழுப்புநிறச் சீனிக்கான விலைக் கட்டுப்பாடு விதித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி புதிய வர்த்தமானி மூலம் இரத்துச் செய்யப்பட்டது. 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி அன்று பருப்பு, பெரிய வெங்காயம் மற்றும் ரின் மீன் ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலை தொடர்பான வர்த்தமானி அறிவிப்பும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

மக்காச்சோளம் மற்றும் கோழி இறைச்சிக்கான கட்டுப்பாட்டு விலைகளை விதித்து கடந்த மார்ச் மாதம் 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட இரண்டு வர்த்தமானி அறிவித்தல்களும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

உலர் பழங்கள், தேங்காய் மற்றும் பருப்புக்கான அதிகபட்ச சில்லறை விலையை 2017ஆம் ஆண்டு டிசெம்பர் 6 ஆம் திகதி அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தலும், 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி பச்சைப்பயறு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்குகளுக்கான அதிகபட்ச சில்லறை விலையை அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தலும் ரத்து செய்யப்பட்டன.

கொண்டைக்கடலை, கோதுமை மா மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவுக்கான அதிகபட்ச சில்லறை விலையை அறிவித்து 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலும் நீக்கப்படும். அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்வதற்கும் நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. (ஒ-இ)

## அரிசிக்கான வரி குறைப்பு

கொழும்பு, நவ. 5

இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான விசேட இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் சம்பா, நாட்டு அரிசி மற்றும் பச்சை அரிசி கிலோ கிராம் ஒன்றுக்கு இறக்குமதி வரி 25 சதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 2 ஆம் திகதி முதல் ஆறு மாதங்களுக்கு இந்த உத்தரவு நடைமுறையிலிருக்கும் என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ-இ)

## அரிசி, சீனியை மட்டும் சதொச இனி வழங்காது

கொழும்பு,நவ.5

சதொச நிறுவனத்தில் இனி அரிசி மற்றும் சீனியை மட்டும் கொள்வனவு செய்ய முடியாது. குறைந்த பட்சம் வேறு 5 பொருள்களையாவது கொள்வனவு செய்ய வேண்டும் என்று வர்த்தக விவகார அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வறிய குடும்பம் என்றாலும் அரிசி மற்றும் சீனி மட்டும் கொள்வனவு செய்ய மாட்டார்கள். மஞ்சள், சீனி மற்றும் அரிசி போன்ற பொருள்களை குறைந்த விலையில் சதொச நிறுவனத்தில் கொள்வனவு செய்து, வெளியில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதால் இவ்வாறு நிபந்தனை விதிக்க வேண்டியுள்ளது. சந்தையில் கேள்வி நிலவும் வரையில் அரிசி தொடர்ச்சியாக இறக்குமதி செய்யப்படும். அதற்கமைவாக ஒரு கிலோகிராம் நாட்டரிசி 99 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும். ஒருவருக்கு ஐந்து கிலோகிராம் வழங்கப்படும்.

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பர்மா ஆகிய நாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படும். வெள்ளை மற்றும் பழுப்புநிறச் சீனியும் வரையறைகளுடன் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

## அடுத்த வருட பட்ஜெட்டில் மக்களுக்கு மானியமில்லை

கொழும்பு,நவ.5

2022 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கு எந்தவித மானியங்களும் இல்லை என்று அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு வருடமும் மக்களுக்கு நன்மைகள் உண்டு. ஆனால் 2022 இல் அது சாத்தியமில்லை. முன்பு புதிய வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது, ஒரு நபரின் சம்பளத்தை அதிகரிப்பது போன்று, மக்கள் எப்போதும் பரிசை எதிர்பார்ப்பார்கள். ஆனால் அதை இப்போதும் வழங்க முடியாது- என்றார். (4)

## தமிழ்க் கூட்டமைப்பு இந்தியத் தூதுவர் 9ஆம் திகதி சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்தியத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு, எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்தியத் தூதுவர் கோபால் பாலேயுடனான சந்திப்பின் போது, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பை, இரா.சம்பந்தன் கோரியிருந்தார். இதனடிப்படையில் 9ஆம் திகதி சந்திப்பு நடைபெறவுள்ளது. (ஒ-5)




**சனங்கள் இந்த விலைவாசியில தீபாவளியை முந்தின மாதிரி பெரிசாக் கொண்டாடேலை. ஆனால் அலரி மாளிகைக்குள்ள இந்தமுறை யும் ஆர்ப்பாட்டமா தீபாவளிக் கொண்டாட்டம் நடந்திருக்கு. சின்னப்பிள்ளையளுக்கு பிரதமரும், பாரியாரும் பலகாரங்கள் தீத்தி, விளக்கு கொளுத்தி ஆடிப்பாடி கொண்டாட்டம் நடந்ததா படங்களும், செய்தியும் வந்திருக்கு.**

**உண்மையா அப்பிடி கொண்டாட்டம் நடந்திச்சா இல்லாட்டி படத்துக்காக அப்பிடி செட்ப் செய்திச் சினமா எண்டது அலரிமாளிகைக்காரருக்கு மட்டும் தான் வெளிச்சம். இப்ப அதில்லை கதை. இந்துமதத்தின்ர பண்டிகையை பௌத்தரான பிரதமர் கொண்டாடி, எல்லாம் மதமும் தனக்கு ஒண்டுதான் எண்டு சொல்ல நினைக்கிறது நல்லதுதான்.**

**ஆனா இப்ப சமய நல்லிணக்கத்தைக் காட்ட முதல் கொரோனாப் பாதுகாப்புக்கெல்லோ முதலிடம் குடுக்க வேணும். நிறையச் சின்னப் பிள்ளையளோட தீபாவளியை மஹிந்த கொண்டாடுற மாதிரி வந்த படங்களில் ஒண்டிலகூட அவரோ, பாரியாரோ மாஸ்க் போடவேயில்லை. சமூக இடைவெளியும் துளியும் இல்லை. அந்தச் சின்னப்பிள்ளையளும் அப்பிடித்தான். அவையளும் மாஸ்க் போடாமல்தான் படங்களில நிக்கினம். என்னதான் கொரோனா இப்ப கட் டுப்பாட்டுக்க வந்திட்டாலும், எப்பவும் அடுத்த அலை வாறதுக்கு நிறையச் சான்ஸ் இருக்கு. அப்பிடி ஒரு ஆபத்து வரக்கூடாது எண்டால், சுகா தார நடைமுறைகளைக் கைவிடக் கூடாது எண்டு கொரோனாச் செயலணியும், சுகாதாரத்துறையும் வாய் ஓயாமல் கிளிப்பிள்ளைக்கு சொல்லுறமாதிரி திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டேயிருக்கினம். அதைச் சனம் தான் ஒழுங்காப் பின்பற்றுறேலை எண்டால், நாட்டின்ர பிரதமர் கூட காதில போட்டுக்கொள்ளாமல் இருந்தால் எப்பிடி நாடு உருப்படும்? 'அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழிதானே'.**

**'மஹிந்தவே மாஸ்க் போடேலையாம் பிறகேன் நாங்கள் போட வேணும்' எண்டு சாதாரண சனங்கள் நினைச்சால், நிலைமை என்னவாகும்? ஒருவேளை அந்தப் படம் எடுக்கப் போன பிள்ளையளுக்கு கொரோனா வந்தால் அதுக்கு ஆர் பொறுப்பு? ஏனெண்டால் அவை எல்லாருக்கும் 10 வயசுக்குள்ளதான் இருக்கும். இன்னமும் அவைக்கு தடுப்பூசி போட்டிருக்க மாட்டினம். அதால கொரோனா தொத்திறதுக்கு வாய்ப்புக்கூட. அதையெல்லாம் ஒருநாட் டின்ர பிரதமரா இருக்கிறவர் யோசிக்கமாட் டாரோ? அவர் சின்னப் பிள்ளையளோட மாஸ்க்கும் போடாமல், சமூக இடைவெளியும் பேணாமல் படத்தைப் போட்டால், பாக்கிறவையும் அப்பிடித் தானே நடக்க வெளிக்கிடுவினம். மற்றவைக்கு புத்தி சொல்ல முதல், பொறுப்பான பதவியில இருக்கிறவை தாங்கள் அதுக் கேத்தமாதிரி நடக்கப் பழக வேணும் கண்டியளோ.**



- பட்சி

# முதலமைச்சருக்கான தகுதிகளை பட்டியலிட்ட விக்னேஸ்வரன் எம்.பி.

## அவற்றில் பல தனக்கிருப்பதாகவும் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், நவ.5**

**முதலமைச்சர் மக்களின் இதயங்களைப் புரிந்து கொள்ளக்கூடிய ஒருவராக இருக்கவேண்டும். எந்த மட்டத்து மக்களுடனும் அன்பாகப் பேசிப் பழகி அவர்கள் குறைகளைத் தீர்க்கக் கூடியவராக இருக்க வேண்டும். நான் பக்கச் சார்பின்றி நடந்து கொண்டதால்தான் எனது முதலமைச்சர் அமைச்சானது 2016ஆம் ஆண்டு இலங்கையின் அனைத்துத் திணைக்களங்கள், அமைச்சுக்கள் ஆகியவற்றுள் நிதி நிர்வாகத்தில் முதலிடம் பெற்றது.**



இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரன்.

"13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் முதல்வர் பதவி முக்கியமானதா?, அவரின் கடமைகள் என்ன?" என்ற கேள்வியுடன் அவர் விடுத்துள்ள வாராந்த கேள்வி பதில் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது கிழக்கின் முதல்வர் ஒருவரின் கடமைகள் வடக்கு முதல்வரின் கடமைகளில் இருந்து வேறுபட்டவை. நான் கூறப்போவது வடக்கு மாகாணசபை முதல்வருக்கே பொருந்தும். முதல்வரே மாகாண மக்களின் அடையாளம். அவர் நடந்து கொள்ளும் விதமே மாகாண மக்களை அடையாளப்படுத்தும்..

வடமாகாண மக்கள் போர் ஒன்றின் கோரப்பிடிக்குள் இருந்து வெளிவந்திருப்பதாலும் அவர்களின் அரசியல் எதிர்காலம் கேள்விக்கிடமாக இருப்பதாலும், பொருளாதார அபிவிருத்தி ஸ்தம்பித்து நிற்பதாலும் முதல்வரின் கலந்துரையாடல்கள், கருத்துப் பரிமாற்றங்கள், மக்களின் பிரச்சினைகள் பற்றிய அவரின் மதிப்பீடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. என் பதவிக் காலத்தில் வடமாகாணத்தில் நடந்தவை, நடப்பவை சம்பந்தமான ஆவண ரீதியான பல தரவுகளை ஐக்கிய நாடுகள் பிரநிதிகள் உட்பட நான் பலருக்குக் கொடுத்துதவினேன். இவை நல்ல பலன்களை காலா காலத்தில் ஏற்படுத்தின என்பதற்கு அத்தாட்சிகள் உண்டு.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர்கள் தமது நன்றியையும் தெரியப்படுத்தி இருந்தனர். உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றின் அலுவலர்கள் வரும்போது அவர்கள் செய்யவிருப்பதை மதிப்பீடு செய்து எமது மக்களின் நலன் கருதி கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபட முதல்வர் தகைமை கொண்டிருக்க வேண்டும்.

மேலும் மாகாண திணைக்களப் பிரதானிகளுடனும் முதல்வர் நடந்து கொள்ளும் விதம் முக்கியமானது.

தனது கட்சிக்கோ, கட்சியின் ஆதரவாளர்களுக்கோ சட்டத்தை மாற்றி நடைமுறையை மாற்றி பிறழ்வாக நடந்து கொள்ளும்படி முதல்வர்கள் ஆணைகள் பிறப்பித்தல் ஆகாது. மாகாணசபை நிர்வாகத்தை கட்சி நன்மைக்காகவோ தன் சுய நன்மைக்காகவோ பாவித்தல் ஆகாது.

இவ்வாறு நான் பக்கச்சார்பின்றி நடந்து கொண்டதால்தான் எனது முதலமைச்சர் அமைச்சானது 2016ல் இலங்கையின் அனைத்துத் திணைக்களங்கள், அமைச்சுக்கள் ஆகியவற்றுள் நிதி நிர்வாகத்தில் முதலிடம் பெற்றது.

நாள்தோறும் வரும் பல கடிதங்கள், தொலைபேசி வேண்டுதல்கள் போன்றவற்றுக்கு பதில் அனுப்ப வேண்டும். என் பதவிக்காலத்தில் வாரத்தின் ஒவ்வொரு நாளும் நான் 15 தொடக்கம்18 மணித்தியாலங்கள் மக்கள் சேவையிலேயே ஈடுபட்டேன்.

முதல்வர் என்பவர் பல் துறைவிற்பன்னராக இருக்க வேண்டும். மக்கள் மனம் அறிந்தவராக இருக்க வேண்டும். நேர்மை உடையவராக இருக்க வேண்டும். சுயநலம் துறந்தவராக இருக்க வேண்டும். மாகாண மக்களின் வருங்காலம் பற்றிய சிந்தனையில் எந்நேரமும் ஊறியவராகவும் இருக்க வேண்டும். இவ்வாறில்லாமலும் முதலமைச்சர் கடமைகளை எவர் தானும் இயற்றலாம். ஆனால் அவர்கள் மக்களால், அலுவலர்களால் வெளிநாட்டுப் பிரதிநிதிகளால் வெளிப்படுத்தப்பட்டு அடையாளப்படுத்தப் படுவார்கள். -என்றுள்ளது.

(எ-இ)

## பதவியுயர்வுக்கு விவரங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,நவ.5

வடமாகாண உள்ளூராட்சி சபைகளின் ஆயுள்வேத மருந்தகங்களில் கடமையாற்றும், ஆயுள்வேத மருத்துவ சேவைக்கு ஆள்சேர்ப்பு செய்யப்பட்டவர்களை, தரம் 2க்கு பதவியுயர்வு வழங்குவதற்கான விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

செயற்றிறன் தேர்வில் சான்றளிக்கப்பட்ட நகல் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி, 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் சேவைக் காலத்தில் அலுவலரால் பெறப்பட்ட சம்பளமற்ற விடுமுறை விவரம், 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்ற உறுதிப்படுத்தப்பட்ட பிரதி , வேதன உயர்வு வழங்கப்பட்ட சான்றிதழின் நகல், தேசிய அடையாள அட்டை நகல், நியமனக் கடிதத்தில் சான்றளிக்கப்பட்ட நகல் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## அக்கராயன் ஆற்றை பாதுகாக்கும் வேலைத்திட்டம் நேற்று ஆரம்பம்!

கிளிநொச்சி அக்கராயன் ஆறு மற்றும் அதன் சூழல் பகுதிகளைப் பாதுகாக்கும் தேசிய வேலைத்திட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் நாட்டைக் கட்டி எழுப்புதல் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தின் கீழ் 103 ஆறுகளைப் பாதுகாக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாகவே கிளிநொச்சி - அக்கராயன் ஆற்றைப் பாதுகாக்கும் வேலைத்திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (ம-6)

## சீனக் கரிம உரத்தை மீளச் சோதனை செய்ய முடிவு

கொழும்பு, நவ.5

சீனக்கரிம உரத்தை மீண்டும் சோதனை செய்ய தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை தீர்மானித்துள்ளது என்று தெரியவருகின்றது.

இது தொடர்பில் தாவர தனிமைப்படுத்தல் சேவையின் மேலதிக பணிப்பாளர் மருத்துவர் துஷார விக்கிரமாராச்சி தெரிவித்துள்ளதாவது

தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை சீனாவிலிருந்து உர மாதிரிகளை மீண்டும் பரிசோதிக்க ஆரம்பித்துள்ளது. இருப்பினும் தொடர்புடைய மாதிரிகள் ஒரு சுயாதீன மூன்றாம் தரப்பினரால் பரிசோதிக்கப்பட்ட பின்னர் தரம் உறுதி செய்யப்பட்டதாகும். உரிய மாதிரிகள் பொருத்தமற்றவை என கண்டறியப்பட்டால், இறக்குமதி செய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ சட்டரீதியாக சாத்தியமில்லை. இலங்கையின் தாவர தனிமைப்படுத்தல் சேவையின்படி, கடந்த 3 மாதங்களில் 145 கரிம உர மாதிரிகளுக்கு இறக்குமதி உரிமம் வழங்கப்பட்டுள்ளது. 16 நாடுகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 19 கரிம உர மாதிரிகள் நாட்டில் பெறப்பட்டுள்ளன. ஏழு கரிம உர மாதிரிகளில் நுண்ணுயிரிகள் காணப்பட்டன.

அதேவேளை சீனாவின் கிங்டாவ் துறைமுகத்திலிருந்து கடந்த செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி 20 ஆயிரம் மெற்றிக் தொன் கரிம உரங்களை ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கிப் புறப்பட்ட ஹிப்போ ஸ்பிரிட் கப்பல் நாட்டுக்குள் வந்தமை தொடர்பாக உரிய அதிகாரிகளால் தமக்கு அறிவிக்கப்படவில்லை. -என்றார். (எ-இ)

## மக்களின் எதிர்ப்பை மீறி மணல் அகழ முடியாது!


### துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, நவ. 5

மக்களின் எதிர்ப்புகளை மீறி மருதங்குளத்தில் மணல் அகழ்வு மேற்கொள்ள முடியாது என துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் கந்தசாமி சகுந்தலாதேவி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்துவெட்டுவான் மருதங்குளத்தில் மணல் அகழ்வதற்கான அனுமதிகளை வழங்குவதற்கு அதிகாரிகள் வந்து சென்றுள்ளனர்.



குறித்த இடத்தில் மணல் அகழ்வு மேற்கொள்ள வேண்டாம் என கிராம மக்களும் விவசாயிகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இதற்குப் பிரதான காரணம் 2009ஆம் ஆண்டுக்கு பின்னர் புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு என்ற பெயரில் வகைதொகையின்றி மண் அகழப்படுவதுடன் காடழிப்பும் பெருமெடுப்பில் இடம்பெறுகின்றது.

இது தொடர்பாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்ட போதிலும் எந்தப் பயனும் இல்லை. ஆகவே, புத்துவெட்டுவான் மருதங்குளத்தில் மணலை அகழ்வுக்கு அனுமதிக்கப்பட்டால் தமது கிராமம் அழிந்து விடும் என மக்கள் அச்சப்படுவதில் நியாயமுள்ளது. உயரதிகாரிகள் அடாத்தாக மருதங்குளத்தில் மணலை அகழ்வோம் என்று கங்கணம் கட்டி நிற்பது புத்துவெட்டுவான் மக்களை ஏமாற்றுகின்ற அல்லது ஒரு கிராமத்தை அழிக்கின்ற செயலாகவே பார்க்க வேண்டி உள்ளது - என்றார். (ம-13)



# மக்கள் பாவனைக்கு இரு கொங்கிரீட் வீதிகள்

கிளிநொச்சி, நவ.5
கிளிநொச்சி பூநகரி பிரதேச சபைக்கு உட்பட்ட இரண்டு வீதிகள் கொங்கிரீட் வீதிகளாக அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள் ளன.

நீண்டகாலமாக பல்வேறு போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வந்த பூநகரி குமுழமுனை, வீதி மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக புனரமைக்கப்பட்டுள்ளது.

12 மில்லியன் ரூபா செலவில், 19 ம் கட்டை குமுழமுனை வீதி கொங்கிரீட் வீதியாக அமைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஜெயபுரம் மாதா சொரூபவீதியும் நிரந்தர வீதியாக அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள் ளது. (ஒ-ரி1-13)

# புலிகளின் தளபதிகள் பலர் சரணடைவதற்கு விரும்பினர்

## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 5

**போரின் இறுதி நாள்களில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர்கள் பலர் சிறிலங்கா படைகளிடம் சரணடைய விரும்பும் விடயத்தை என்னிடம் தெரிவித்தனர். அதனை நான் பஸில் ராஜபக்சவிடம் தெரிவித்தேன் என்று தெரிவித்துள்ளார் இலங்கைக்கான முன்னாள் சமாதானத்தூதரும், நோர்வேயின் சர்வதேச மேம்பாட்டு அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'என்னிடம் விசேடமான தகவல்கள் எதுவும் இல்லை. போரின் கடைசி நாள்களில், ஒரு சிறிய பகுதியில் விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தனர். 2009 மே 17 அன்று வெள்ளைக்கொடி சம்பவத்துக்கு முன் - விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத் தலைவர் புலித்தேவன் எங்களுக்கு அழைப்பெடுத்து அவரும் புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் பாலசிங்கம் நடேசனும், இலங்கைப் படைகளிடம் சரணடைய விரும்புவதாகவும் அதில் நாங்கள் சம்பந்தப்பட வேண்டும் என்றும் கூறினார். அதற்குத் தாமதமாகிவிட்டது என்று நாங்கள் சொன்னோம்.

போரை சமாதானமான முறையில் முடிவுக்குக் கொண்டு வர பல சந்தர்ப்பங்களில் நாங்கள் முன்மொழிந்தோம். ஆனால் அப்போது எங்களால் அதிகம் செய்ய முடிய வில்லை, ஏனென்றால் நாங்கள் களத்தில் இல்லை.

ஆனால், விடுதலைப் புலிகளின் சரணடையும் எண்ணம் குறித்து அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் சகோதரர் பஸில் ராஜபக்சவிடம் தெரிவிப்பதாக உறுதியளித்தோம். அதே போலவே அன்றையதினம் பிற்பகல் பஸிலிடம் இதனைத் தெரிவித்தோம். எனவே, நடேசனும் புலிதேவனும் சரணடையும் எண்ணப்பாட்டை அரசாங்கம் நன்கு அறிந்திருந்தது' - என்றார். (ம)


# பெயரிடுதலுக்கு 11வீதிகள் தெரிவு

கிளிநொச்சி, நவ.5
வீதிகளுக்கு பெயரிடுதல் வேலைத்திட்டத்தில் 11 வீதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டின் வரவு-செலவுத்திட்டத்தின் ஒதுக்கீட்டின் பிரகாரமே இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இதற்கமைய குறித்த வேலைத்திட்டம் கடந்த திங்கட்கிழமை நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், 2022 ஆம் ஆண்டுக்கான வட்டாரத்துக்கான் ஒதுக்கீட்டு அடிப்படையில் முழங்காவில் வட்டாரத்துக்காக ஏ-32 வீதியுடன் இணையும் 10 வீதிகள் முன்மொழியப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி1-13)



# ஐக்கிய மக்கள் சக்தியினரால் மாணவர்களுக்கு சப்பாத்துக்கள்

முல்லைத்தீவு, மாங்குளம் பிரதேசத்தில் கல்வி கற்கும் பொருளாதாரம் நலிவடைந்த குடும்பத்தைச் சேர்ந்த 70 மாணவர்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தியினரால் ஒரு தொகுதி சப்பாத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் முகுந்தகஜனின் கோரிக்கைக்கு அமைய ஐக்கிய இளைஞர் சக்தியின் வன்னிமா வட்ட செயலாளர் மு.லக்ஸ்சயனால் ஆதர்சம் அமைப்பு ஊடாக நேற்று முன்தினம் மாங்குளம் பிரதேச சபை பொதுமண்டபத்தில் வைத்து இந்தச்சப்பாத்துக்கள் வழங்கப்பட்டன. இவை பனிக்கன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் 35 பேருக்கும் மாங்குளம் சண்முகரட்ணம் வித்தியாலய மாணவர்கள் 35 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்க ளான எரான் விக்கிரமரத்ன, புத்திக்க பத்திரன எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-19)

# கொக்குவில் விபத்தில் இளைஞன் சாவு

யாழ்ப்பாணம், நவ. 5
கொக்குவிலில் நேற்று இரவு இடம் பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று யாழ்.போதனா மருத்துவமனைத் தரப்புத் தெரிவித்தது.

கொக்குவில் பிடாரி அம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த இந்திரன் பிரகலாதன் (வயது - 26) என்பவரே உயிரிழந்தார். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (து)

# நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கிவைப்பு

சாவகச்சேரி நவ.5
தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி பயனாளிக்ளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தின் கீழ் 29 பயனாளர்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

முதற்கட்டமாக பிரதேச செயலகத்துக்கு கிடைத்துள்ள நீர்இறைக்கும் இயந்திரங்களில், 21 இயந்திரங்கள் கைதடி சமுர்த்தி பிரிவுக்கும், 8 இயந்திரங்கள் சாவகச்சேரி சமுர்த்தி பிரிவுக்கும் வழங்கப்பட்டன.

அதேவேளை, இரண்டாம் கட்டமாக கிடைக்கும் நீரிறைக்கும் இயந்திரங்களை கொடிகாமம் மற்றும் வரணி சமுர்த்தி பிரிவுகள் ஊடாக பயனாளர்களுக்கு விநியோகிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (ய-9)

# இரு வாகனங்கள் மோதுண்டு விபத்து

யாழ்ப்பாணம், நவ.5
யாழ். வேம்படி வீதி 1 ஆம் குறுக்குத் தெருச் சந்தியில் தனியார் பஸ் வண்டியும் விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான பஜீரோவும் கடந்த செவ்வாய்க்கிழமை மோதுண்டு விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் தனியார் பஸ்யில் பயணம் செய்தவர்கள் காயமடைந்த நிலையில் யாழ் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் மேலதிக விசாரணகளை மேற்கொண்டு வருகின்றனர். (ய-20)

# குண்டும் குழியுமாக காணப்படும் மூளாய் -சித்தன்கேணி டச்சுவீதி

யாழ்ப்பாணம், நவ.5
வலி.மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட மூளாய் - சித்தன்கேணி டச்சு வீதி குண்டும் குழியுமாக வெள்ளம் நிறைந்து காணப்படுவதால் அப்பகுதியால் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



தொல்புரம் பகுதியில் உள்ள இந்த வீதி குண்டும் குழிகளும் நிறைந்து காணப்படுவதால் வெள்ளநீர் தேங்கியுள்ளது. இதன்காரணமாக இவ்வீதியூடாக பயணம் செய்யும் முதியவர்கள், பாடசாலை மாணவர்கள், தொழிலுக்குச் செல்வோர் எனப் பலரும் அவதிக்குள்ளாகின்றனர். அத்துடன் 785 வழித்தட இ.போ.ச. பஸ் சேவை இடம்பெற்றிருந்த நிலையில் தற்போது இடம்பெறுவதில்லை.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-125)

# லாப் சமையல் எரிவாயுவின் விலை மீண்டும் அதிகரிக்கும்

கொழும்பு, நவ. 5

**சமையல் எரிவாயுவின் விலையை மீண்டும் அதிகரிப்பதற்கு, லாப் எரிவாயு விநியோக நிறுவனம், நுகர்வோர் அதிகார சபையிடம் அனுமதி கோரியுள்ளது.**



லாப் ரக சமையல் எரிவாயுவின் விற்பனை விலை கடந்த மாதம் 10 திகதி நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டது. 12.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 984 ரூபாவாலும், 5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 393 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டது.

அதற்கமைய 12.5 கிலோகிராம் நிறையுடைய சிலிண்டரின் புதிய விலை 2 ஆயிரத்து 840 ரூபாவாகவும், 5 கிலோகிராம் நிறையுடைய சிலிண்டரின் புதிய விலை ஆயிரத்து 136 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்குமுன்னர் கடந்த ஒகஸ்ட் மாதமும் லாப் ரக சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டது.

அதேவேளை லிட்ரோ ரக சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை கடந்த மாதம் 10 ஆம் திகதி நள்ளிரவு அதிகரிக்கப்பட்டது. அதற்கமைய 12.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 2 ஆயிரத்து 675 ரூபாவாகவும், 5 கிலோகிராம் சிலிண்டரின் விலை ஆயிரத்து 71 ரூபாவாகவும், 2.5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 506 ரூபாவாகவும் காணப்படுகிறது.

சமையல் எரிவாயுவின் விலை தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டுள்ள போதும், எரிவாயு சிலிண்டரைப் பெற்றுக்கொள்வதில் நுகர்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-4)

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், நவ. 5

பாடசாலை மாணவர்களுக்கு உலர் உணவுப் பொருள்களும் கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

குட்டியபுலம் அ.த.க பாடசாலையின் மாணவர்களுக்கே இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.

லைடன் ஆடைத்தொழிற்சாலையின் உரிமையாளர் அன்ரனி பெனடிக்றின் நிதியில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களையும், 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் கற்பித்தல் சாதனங்களுக்கான அனுசரணையையும் அவர் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரீ)

# வவுனியா மருந்தகங்கள் விசேட கண்காணிப்பில்

*சுகாதார சேவைகள் பணிமனை நடவடிக்கை*

வவுனியா,நவ.5


வவுனியா மாவட்டத்திலுள்ள மருந்தகங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதால், விசேட சோதனைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


பிராந்திய சுகாதார அதிகாரிகளுக்கும், மருந்தக உரிமையாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம்.மகேந்திரன் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றுக் காரணமாக, மருந்தகங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த முடியவில்லை. சில மருந்தகங்கள் தொடர்பில் எமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதன் அடிப்படையில் மருந்தகங்கள் தொடர்பில் எதிர்வரும் காலங்களில் கவனம் செலுத்தப்படும்.

மருந்தக உரிமையாளர்களுக்கு சட்ட திட்டங்கள் தொடர்பில் தெளிவு வழங்கப்பட்டது. மருந்தகங்களில் மருந்தாளர் கட்டாயம் இருத்தல் வேண்டும். மருந்துகள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் மாத்திரம் கொள்வனவுசெய்யவேண்டும். மருத்துவரின் சிபாரிசு இன்றி மருந்துகள் வழங்கப்படக் கூடாது. மருந்தகங்களில் பணியாற்றும் ஏனைய ஊழியர்களும் மருந்துகள் தொடர்பில் அறிவுகளைப் பெற்றிருத்தல் அவசியம். மருந்தகங்களுக்கு குளிரூட்டி அவசியம். இவற்றைப் பின்பற்றத் தவறினால் அந்த மருந்தகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்- என்றார். (ஒ-4-18)





# முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்றாம் கட்டத் தடுப்பூசி

முல்லைத்தீவு, நவ.5

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுகாதாரப் பிரிவில் கடமையாற்றுவோருக்கான, மூன்றாவது கட்டத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள், மருத்துவர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு, மூன்றாவது கட்டமாக பைஸர் தடுப்பூசிசெலுத்தப்பட்டது.

முல்லைத்தீவு உண்ணாப்பிலவு ஆரம்ப சுகாதார மருத்துவமனை மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஒ-4-19)

# முதலாவது விமானநிலைய ஹோட்டல் கட்டுநாயக்கவில் அமையவுள்ளது

கொழும்பு, நவ.5

இலங்கையின் முதலாவது விமான நிலைய ஹோட்டல் கட்டுநாயக்கவில் உள்ள விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் வளாகத்துக்குள் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இது தொடர்பில், கொழும்பு சர்வதேச விமான நிலைய ஹோட்டல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் இலங்கை முதலீட்டுச் சபை உடன்படிக்கை மேற்கொண்டுள்ளது.

கொழும்பு சர்வதேச விமான நிலைய ஹோட்டல் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் 18.2 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்யும் என்றும், இந்தத் திட்டத்தின் முதல் கட்டம் 2022ம் ஆண்டளவில் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஹோட்டல் 100க்கும் மேற்பட்ட அறைகளுடன் நான்கு நட்சத்திர வசதிகளைக் கொண்டும், மேலும் இதில் விசாலமான பிரதான குளம், உடற்பயிற்சிக் கூடம், ஸ்பா மற்றும் பணியாளர் ஓய்வறை ஆகியவற்றை உள்ளடக்கியதாகவும் இருக்கும். பல உணவகங்களைக் கொண்டிருக்கும் இந்த ஹோட்டல் பசுமையான வெப்பமண்டல சூழலுக்கு மத்தியில் அமைக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தில் சர்வதேச அளவில் புகழ்பெற்ற கட்டடக்கலை வடிவமைப்புகள் மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்கள், ஜப்பானிய கூட்டு நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரீ)

# கப்ராலுக்கு எதிரான மனு நிராகரிப்பு

கொழும்பு,நவ.5

மத்திய வங்கி ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டமையை சவாலுக்கு உட்படுத்தும்வகையில், தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்த அஜித் நிவாட் கப்ரால், அந்தப் பதவியிலிருந்து விலகியதன் பின்னர், மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

இந்த நியமனமானது, சட்டத்துக்கு முரணானது என்று குறிப்பிட்டு, அதனைச் சவாலுக்கு உட்படுத்தும் வகையில், தென் மாகாண முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னக்கோனால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. (ஒ-4)

# பைசர் தடுப்பூசி ஏற்ற மாணவர்கள் ஆர்வம்

யாழ்ப்பாணம்,நவ.5

முல்லைத்தீவில் பைசர் தடுப்பூசி ஏற்றிக் கொள்வதற்கு பாடசாலை மாணவர்கள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

மாவட்டத்தில் தரம் 11 தொடக்கம் 13 வரையிலான பாடசாலை மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



தடுப்பூசி பெறுவதற்கு அறிவிக்கப்பட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது. புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் இதுவரை 520 மாணவர்கள் தடுப்பூசி பெற்றுள்ளனர். உடையார் கட்டு மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் தடுப்பூசி ஏற்றப்பட்டது. இன்று வெள்ளிக்கிழமை விசுவமடு பாரதி மகாவித்தியாலயத்தில் தடுப்பூசி ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியின் மேற்பார்வையில் இராணுவத்தினரின் ஒழுங்குபடுத்தலில், உத்தியோகத்தர்களின் நெறிப்படுத்தலில் தடுப்பூசி ஏற்றப்படுகின்றது.

பெற்றோரின் வருகையுடன் மாணவர்கள் ஆர்வத்துடன் தடுப்பூசி பெற்று வருவதை அவதானிக்க முடிந்தது. (ஒ-4-19)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மரவள்ளியும், சூடும் புதிதல்ல!

நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால், மக்கள் மரவள்ளிக் கிழங்கு, தானியங்கள் என்பவற்றை உண்பதற்குப் பழக்கப்பட்டுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் சமல் ராஜபக்ச. சமலின் இந்தக் கருத்து, அரசுக்கு எதிராக ஏற்கனவே எரிந்துகொண்டிருந்த எதிர்ப்புகள் மற்றும் அதிருப்திகள் என்பவற்றின்மீது எண்ணெயை ஊற்றி, கொழுந்துவிட்டெரிய வைத்துள்ளது.


மரவள்ளிக் கிழங்கை மையப்படுத்திய உணவு முறைமை இலங்கை மக்களுக்குப் புதிதல்ல. சுதந்திரக் கட்சியின் சார்பாக சிறிமாவோ பண்டாரநாயக்க 70களில் ஆட்சியமைத்திருந்த காலத்தில், தன்னிறைவுப் பொருளாதாரத்தை இலங்கையில் கொண்டுவர எத்தனித்தபோது இந்தக் கொள்கையும் அதற்கான செயல்வடிவமும் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், அர்த்தம் பொதிந்ததவையாக அந்த நடவடிக்கைகள் அமையவில்லை. இன்றளவும் இலங்கை சந்தித்த கறுப்பு நாள்கள் சிறிமாவோவின் ஆட்சிக்காலப்பகுதிதான் என்பதை எவராலும் மறுத்துரைக்க முடியுமா?.

சிறிமாவோவின் தன்னிறைவுத் திட்டம் மிகநல்ல திட்டம்தான். ஆனால், உரிய பொறிமுறைகள் மற்றும் போதிய காலஅவகாசங்கள் அல்லாமல் அது முன்னெடுக்கப்பட்டதால்தான் சிறிமாவோவை வீட்டுக்கு அனுப்ப இலங்கையர்கள் முடிவெடுத்தனர். அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்து, திறந்த பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்திய பின்னரே நிலைமை சுமுகமானது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்குப் பின்னர் சுதந்திரக் கட்சி சுமார் 20 வருடங்களுக்கும் மேல் நாட்டின் ஆட்சிப் பொறுப்பைத் தன்வசப்படுத்தியது. ஆனால், 'சூடு கண்ட பூனையாக' மீண்டும் சிறிமாவோவின் சிந்தனைகளுக்குள் சிக்கிக்கொள்ள சுதந்திரக் கட்சி விரும்பவில்லை. சந்திரிகா, மஹிந்த, மைத்திரி என்று எவரும் இந்தத் திட்டத்தை நினைத்தும் பார்க்கவில்லை. இவ்வாறிருக்கையில் சிறிமாவோவின் அதே சிந்தனைகளை 'சுபீட்சத்துக்கான நோக்கு' என்ற பெயரோடு மீண்டும் கையிலெடுக்க எத்தனிக்கின்றது பெரமுன அரசு.

பெரமுன முன்வைத்த இயற்கை உரக் கொள்கையும்சரி, தற்போதைய மரவள்ளிக் கிழங்குக் கதையும் சரி எவையும் மக்கள் நலன் சார்ந்து முன்வைக்கப்பட்டவையல்ல. இந்த அரசுக்கு முன்னால் இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட தெரிவுகளோ இருந்து அவற்றில் ஒன்றாக இந்தத் திட்டங்களை இவர்கள் தேர்ந்தெடுக்கவில்லை. இவர்களுக்கு இருப்பது ஒரேயொரு தெரிவுதான். டொலர் இருப்பில் இல்லாமை உட்பட்ட பல்வேறு காரணங்களால் வேறு வழியில்லாமல் இந்தத் தெரிவுக்கு அரசு சென்றிருக்கின்றது. ஆனால் அதுவே இப்போது அரசாங்கத்துக்கு ஆப்பாகி இருப்பதுதான் வேடிக்கை. தவறான திட்டமிடலின்மையால் விவசாய விளைச்சல்கள் குன்றி, உணவுப்பஞ்சம் தோன்றி, மரவள்ளிக்கிழங்கே பிரதான ஆகாரமாக இலங்கையில் மாறுமளவுக்கு இருக்கிறது ராஜபக்சக்களின் ஆட்சிச் சீத்துவம்.

முறையான ஆய்வுகள், சாதகபாதகங்களைக் கவனத்திற் கொள்ளாமை, உடனடி விளைவுகளுக்கான மாற்றுவழி என்பவற்றைக் கையாளாமையால், எப்படி சிறிமாவோவின் தன்னிறைவுப் பொருளாதாரத் திட்டமானது ஆட்சியையே கவிழ்க்குமளவுக்கு படுதோல்வி கண்டதோ, அதேபோன்றுதான் இயற்கைப் பசளைத் திட்டமும் கோத்தாபய அரசாங்கத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறிவிட்டது. சிறிமா விட்ட அதே தவறையே கோத்தாபயவும் பின் தொடர்வதே அதற்குக் காரணம். இயற்கைப் பசளைக்கு விவசாய முறைமை மாற்றப்பட்டால் அதனால் ஏற்படும் பாதக விளைவுகளுக்கான தீர்வு குறித்தோ, இவ்வளவு பெருந்தொகை இயற்கைப் பசளையை விவசாயிகளுக்கு உரியகாலப்பகுதியில் பெற்றுக் கொடுப்பது பற்றியோ, இரசாயன உரவகைகளுக்கு மட்டுமே விளைச்சல் தரும் விதையினங்களுக்கான மாற்றீடுகள் பற்றியோ கோத்தாபய அரசாங்கம் கொஞ்சமும் அக்கறை காட்டவில்லை. அதனாலேயே இந்தளவு எதிர்ப்பும், சிக்கல்களும். உள்ளூர் விவசாயிகள் முதல் இலங்கைக்கு படியளக்கும் சீனாவரை இந்த இயற்கைப் பசளைத் திட்டத்தால் கோத்தாபய அரசாங்கம் எதிர்ப்பைச் சம்பாதித்ததுதான் மிச்சம்.

இயற்கைப்பசளை விவசாயம் என்ற உன்னதமான திட்டத்தை அவசரக்குடுக்கைத்தனத்தாலும், தெளிவான திட்டமிடலின்மையாலும் போட்டுடைத்திருக்கிறது இந்த அரசாங்கம். அதற்கான பரிசாக, சிறிமாவுக்கு கிடைத்ததைப் போல சூடு கோத்தாபயவுக்கும் கிடைக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதையே, அரசாங்கத்துக்குள் முற்றி வெடித்துள்ள முரண்பாடுகள் புலப்படுத்துகின்றன.




# யுகதனவி முதலீடு நாட்டுக்கு கிடைத்த அரிய வாய்ப்பாகும்

## ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கை

**கொழும்பு, நவ. 5**

**'யுகதனவி' முதலீடு, இந்த நாட்டுக்குக் கிடைத்த அரிய வாய்ப்பாகும் என்பதால், அதனைப் பயன்படுத்திக் கொள்வதற்காக குறுகிய காலப்பிரச்சினைகளை மறந்து, நீண்டகாலப் பிரதிபலன்களைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று, மின்சாரத்துறை அதிகாரிகள் சுட்டிக்காட்டினர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காணொலி மூலமான செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

புதிய எண்ணக்கருக்கள், புதிய தொழில்நுட்பங்களுடன் இடைநிலை சக்திவலு மூலங்களுக்குச் செல்ல வேண்டியது கட்டாயமாகி உள்ளது, குறைந்த செலவைக் கொண்டதும் சுற்றாடலுக்குப் பாதிப்பு இல்லாததுமான எல்.என்.ஜி. மின்சார உற்பத்தி முறையிலான 'யுகதனவி' மின்சார நிலையத்தை நிர்மாணிப்பதற்கு வேண்டிய தேவையானது, நாட்டுமக்களுக்கு நன்மை பயக்கும் அரசாங்கத்துக்கு இலாபகரமான திட்டமாகவும் இது விளங்குகின்றது என மின்சாரத்துறை நிபுணர்கள் தெரிவித்தனர் - என்றுள்ளது. (ம)

# மின் துண்டிப்பு ஏற்படுத்த சூழ்ச்சி செய்கிறது அரசு!

## மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.5

நாடளாவிய ரீதியில் மின்சாரத்தைத் துண்டிக்கும் சூழ்ச்சியுடன் அரசு செயற்படுகின்றது. மின் துண்டிப்புப் பழியை எம்மீது சுமத்த முயற்சிக்கின்றது என்று இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நள்ளிரவில் அமெரிக்க நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்துள்ளீர்கள். அந்த உடன்படிக்கையை கூடிய விரைவில் இரத்து செய்யுங்கள். உங்களுக்குத் தெரியாது, நாம் தற்போது செய்யும் இந்த ஆர்ப்பாட்டத்தை வேலை நிறுத்தப் போராட்டம் என நினைத்துக்கொண்டு அரசு பயந்து நடுங்கிக்கொண்டுள்ளது. இதற்காக அரச நிர்வாகிகளும், இலங்கை மின்சார சபை நிர்வாகிகளும் நீதிமன்றுக்கு சென்று நாங்கள் மேற்கொள்ளும் இந்த ஆர்ப்பாட்டத்தை நிறுத்த வேண்டுமெனக் கோரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். நாங்கள் நீதிமன்றுக்கு தலைவணங்குகிறோம். ஆர்ப்பாட்டங்களை நடத்துவது ஜனநாயக உரிமையாகும். எம்மால் அவற்றைத் தடுக்க முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இன்னமும் இந்த நாட்டில் நீதி என்ற ஒன்று எஞ்சியுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தின் தெற்கு முனையத்தை சீனா திறந்து வைக்கும்போது உங்களது சிங்கக்கொடியை ஏற்ற முடியாது என சீன அதிகாரிகள் தெரிவித்தனர். சீனக் கொடி மாத்திரமே ஏற்றப்பட்டது. ஆகவே நாம் கேட்க விரும்புகிறோம், நாட்டை நிர்வ கிக்கும் இந்த சகோதரர்கள் இருவரும்இரகசியமாகஇலங்கை மின்சாரசபையையும் கெரவலப்பிட்டி மின்நிலையத்தையும் அமெரிக்காவுக்கு விற்றுவிட்டனரா என்ற சந்தேகம் எழுகிறது - என்றார். (எ-இ)


நவம்பர்
2021

### வடமாகாண மரநடுகை மாதம்

"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நட வேண்டும்."

– அலெக்சான்டர் சிமித்





படங்கள் - ஐ.சிவசாந்தன்



யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இடம்பெற்ற விசேட வழிபாடுகளில் மக்கள் பங்கேற்றனர். (ஒ-4)





பிரதமரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமாகிய மஹிந்த ராஜ பக்சவின் வாசஸ்தலமாகிய அலரி மாளிகையில், இந்து சமய அற நெறிப் பாடசாலை மாணவர்க ளோடு தீபாவளிப் பண்டிகை நிகழ்வு சிறப்புற இடம்பெற்றது. (ஒ-4)



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் விசேட தீபாவளி வழிபாடுகள் அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றன. (ஒ-4)





தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. அதில் யாழ். மாவட்ட இராணுக் கட்டளைத்தளபதி கொடித்துவக்கு ,இலங்கை நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் திஸாநாயக்க, வடமாகாண சபையின் பிரதம செயலாளர் பந்துலசேன ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-4,125)



மலையக மக்கள் சமய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து தீபாவளி பண்டிகையை நேற்று வெகுவிமரிசை யாகக் கொண்டாடினர். ஆலயங்களில் விசேட சமய வழிபாடுகள் நடைபெற்றன. (ஒ-



தீபாவளியை முன்னிட்டு மன்னாரில் உள்ள இந்து ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள் நேற்று இடம்பெற்றன. மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வழிபாடுகளில் ஈடுபட்டனர். (ஒ-4,56)

## ரன்மல் கொடிதுவக்கு மீது மேலும் பல குற்றச்சாட்டுகள்!

கொழும்பு, நவ. 5

கிரியெல்ல பிரதேசத்தில் அண்மையில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரன்மல் கொடிதுவக்கு மீது மேலும் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட் டுள்ளன.

சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட காணொலிக் காட் சிகள் சப்ரகமுவ சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதி பர் ரன்மல் கொடித்துவக்கு, சாரதியொருவரை வீதியில் தாக்கியதைக் காண்பித்தன. இதைய டுத்து, அவர் மருத்துவச் சேவைகள் மற்றும் நலன் புரி பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

நீலகண்டன் சட்ட நிறுவனத்தின் கூற்றுப்படி, இரத் தினபுரி - கிரியெல்ல வீதியில், சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் வாகனத்தை முந்திச் சென்றதைத் தொடர்ந்து, குறித்த சாரதியின் வாகனம் வழிமறிக் கப்பட்டு, சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் மற்றும் இரண்டு பொலிஸ் அலுவலர்கள் அவரைத் தாக் கினர் என்று ஆரம்பத்தில் குற்றஞ் சுமத்தப்பட்டனர். வீதியில் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து அவர்களின் கட்சிக்காரர் கிரியெல்ல பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஓர் அறைக்குள் வைத்து சித்திரவதை செய்யப்பட்டார். தங்கள் கட்சிக்காரர் நிர்வாணமாக்கப்பட்டு மண்டி யிடும்படி கட்டாயப்படுத்தப்பட்டார் என்றும் அவர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டார் என்றும் அந்த நிறுவனம் தற்போது குற்றஞ்சாட்டி யுள்ளது. (ம)

## நலமுடன் உள்ளார் தேனிசை செல்லப்பா

புதுடில்லி, நவ. 5



பாசறை பாவாணர் தேனிசை செல்லப்பா காலமானார் என்று சமூக வலைத்தளங்களில் பரவி யது போலித்தகவல் என்பதை அவரது குடும்ப உறுப்பினர்கள் உறுதி செய்துள்ளனர்.

தேனிசை செல்லப்பா காலமாகி விட்டார் என்று யாரோ ஒருவர் வதந்தி பரப்பி விட்டார். அதை நம்பி, மேலும் பலர் வதந்தியைப் பரப்பினார்கள். இது வெறும் வதந்தி, தேனிசை செல்லப்பா நல மாக உள்ளார் என குடும்ப உறுப்பினர்கள் மேலும் தெரிவித்தனர். (ம)

## உள்ளூராட்சித் திணைக்கள அலுவலர்களுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம் நவ.5

வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் திணைக்கள சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு 2022 ஆம் ஆண்டுக்கான இடமாற்றல்பட்டியல் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் உள்ளூ ராட்சி மன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த இடமாற்றல் எதிர்வருகின்ற 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் நடை முறைக்கு வரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இடமாற்றல் தொடர்பாக மேன்முறையீடு செய்ய விரும் பும் அலுவலர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ் வாய்க்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ் சன் அறிவித்துள்ளார். (ய-9).



யாழ்ப்பாணம் பிரதான தபாலக நிர்வாகச் சிக்கலுக்கும், ஸ்திரமற்ற நிர்வாகத்துக்கும் எதிராக ஊழியர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஒ-4-20)

தி.சுதர்மன்
சித்தவைத்தியர்

# குழந்தைவரம் தரும் கந்தசஷ்டி விரதம்



குழந்தைவரம் வேண்டி முருகனை நினைத்து விரதமிருக்க அவரே குழந்தையாகப் பிறப்பார் என்பது ஐதீகம். இந்த ஐதீகத்தில் உண்மை உள்ளதா? திருப்புகழில் முருகனே குழந்தையாக வேண்டும் என்று வேண்டுகின்றார் அருணகிரிநாதர்.

"இந்த உலக மாயையில் சிக்குண்டு, இல்லற வாழ்வில் எனக்குக் கிட்டிய அழகிய மனைவியின் கருவில் உருவாகி பத்து மாதம் கர்ப்பத்தில் வளர்ந்து, நல்ல அழகோடு பூமியில் தோன்றிய குழந்தைச் செல்வமாக நீ எங்களுக்குப் பிறந்து, குழந்தைப் பாசத்தால் நான் உன்னை உச்சி முகர்ந்து, விழியோடு விழிவைத்து, முகத்தோடு முகம் சேர்த்து எனது மலை போன்ற தோள்களில் நீ தழுவி உறவாடி, என் மடியில் அமர்ந்து குழந்தையாக விளையாடி, நாள்தோறும் உன் மணி வாயால் முத்தம் தந்தருள வேண்டும்" என்று திருப்புகழ் பாடுகின்றது.

குழந்தைப் பேறின்மைக்கு பலவாறான உடற்கோளாறுகள் காரணமாகின்றன. சிலவகை உடற்கோளாறுகளுக்கு 'இலங்கணம் பரம ஔடதம்' என்பது சித்த மருத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்று. இலங்கணம் இருத்தல் என்பது நீர் கூட அருந்தாமல் விரதமிருப்பது ஆகும். இந்த இலங்கண செயற்பாடே தமிழர் வாழ்வியலில் பலவகை விரதங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்விரதங்களில் ஐப்பசி சஷ்டி விரதம் சிறப்பான ஒன்றாகக் காணப்படுகின்றது. இதனையே 'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்' என பழமொழியாக சொல்லியுள்ளார்கள். அதாவது கந்த சட்டியில் ஆறுநாள்களும் விரதம் இருந்தால் அகப்பையில் வரும் என்பதாகும். அகப் பையில் என்பது ஆணினது விதைப்பை, பெண்ணினது கர்ப்பப் பைகள் என்பனவாகும். இவர்களது இனப்பெருக்க உறுப்புக்களில் ஏதேனும் மாறுபாடுகள், குறைபாடுகள் இருப்பின் அவை நீங்கி குழந்தைப்பேறு உண்டாகும் என்பதே இதன் கருத்தாகும்.

கந்த சஷ்டி விரதம் ஆறு நாள்கள் கைக்கொள்ளப்படும் ஒரு விரதமாகும். அதாவது ஐப்பசி வளர்பிறைப் பிரதமை முதல் சஷ்டி ஈறான ஆறு நாள்கள் ஆகும்.

சில வேளைககளில் சஷ்டி திதி நேரங்கள் ஆறாவது நாள் மாலை நேரம் வரை தொடராது விடின், சூரசம்காரம் சஷ்டி திதியில் மாலை நேரத்தில் நடைபெற வேண்டும் என்பதால், சஷ்டி திதியை கருத்திற்கொண்டு ஐந்தாவது நாளே சூரசம்காரம் இடம்பெறுவதும் உண்டு. ஆனால் திதிக் கணக்கின் பிரகாரம் ஆறு நாள்கள் விரதமிருப்பது அவசியமாகும்.

சித்தமருத்துவ அடிப்படையில் எமது உடலானது சாரம், குருதி, தசை, கொழுப்பு, என்பு, மூளை விந்து அல்லது முட்டை (ஆணில் விந்து, பெண்ணில் கருமுட்டை) வரையான ஏழு அடிப்படை உடல் அமைப்புக்களால் ஆனது. இவற்றில் முதலாவது உடற்கட்டுக்கு, நாம் உண்ணும் உணவின் மூலம் போசணை சென்று அதனைப் போசித்த பின்னரே ஒழுங்கு முறையில் ஒவ்வொரு உடல் அமைப்புக்களும் போசணையைப் பெறுகின்றன.

அவ்வாறு பார்க்கும் போது நாம் உண்ணும் உணவானது முதல் நாள் சாரம் எனப்படும் உடற்கட்டினைப் போசித்து ஏழாவது நாள் விந்து அல்லது கரு முட்டையை போசிக்கும். இதன் அடிப்படையில் முதல் நாள் விரதம் இருக்கும்போது முதலாவது உடற்கட்டான சாரம், போசணை கிடைக்காது இலங்கணம் காக்கப்படும். ஆனால் முதல் உண்ட உணவுகளின் போசணையானது ஏனைய உடற்கட்டுக்களை தொடர்ந்து போசிப்பதால் அவ்வுடற் கட்டுக்களுக்கான இலங்கணம் நடைபெறமாட்டாது. இவ்வாறு படிப்படியாக நாள்கள் கூடிச்செல்ல முறையே இரண்டாது, மூன்றாவது என ஏனைய உடற்கட்டுக்களும் இலங்கணத்தை அடைகின்றன. இவ்வாறாக ஆறாவது நாள் இலங்கணத்தின் போது ஏழாவது உடற்கட்டான விந்து அல்து முட்டை என்பன முன் உண்ட உணவின் போசணையால் போசிக்கப்படுகின்றன. ஏழாவது நாள் பாறணையின் போது உணவை உட்கொள்ளும் போது மேற்படி ஏழு உடற்கட்டுக்களும் இலங்கணத்தை அடைகின்றன.

ஆனாலும் ஆறு நாள்கள் கடும் விரதம் இருத்தலின் போது அடிப்படை உயிர்நிலை அனுசேப தொழிற்பாடுகளுக்கான சக்தியை வழங்குவதற்காக, ஏழு உடற்கட்டுக்களுக்கும் உடனடியாக சக்தியைத் தரக்கூடிய சாத்வீக குணமுடைய, மாறுபாடுகளை ஏற்படுத்தாத, உணவான பால் அல்லது தண்ணீர் மட்டும் ஒருவேளை உணவாகக் கொள்ளப்படுகின்றது. அல்லது அவரவர் உடல் நிலைக்கு ஏற்ப பாலும் மேற்படி வகையான பழவகையும் ஒரு வேளை மட்டும் உட்கொள்ளப்படுகின்றது. இவற்றின் அடிப்படையில், இறைமருத்துவமான சித்தமருத்துவமானது முதற்சித்தன் சிவனின் ஊடாக முருகப்பெருமா னுக்கு அருளப்பட்டு முருகப் பெருமானாலேயே அகத்தியர், திருமூலர் முதலான சித்தர்களினூடு மானிடர்களுக்கு வழங்கப்பட்டது என்று சித்தமருத்துவ வரலாறு கூறுகின்றது.

அவ்வாறு உருவான மருத்துவம் கூறும் 'இலங்கணம் பரம ஔடதம்' என்பதனை சரிவர மேற்கொள்ள வேண்டுமாயின் ஆறு நாள்களும் இலங்கணம் எனும் விரதமிருத்தல் அவசியமாகின்றது.



ஆறுநாள்களும் இறை சிந்தையுடன் இவ்வாறு விரதமிருக்கும் போது மனம் ஒருநிலைப்பட்டு தெளிவடைகின்றது. தேவையற்ற உளநெருக்கீடுகள் மறைகின்றன. உளநெருக்கீடுகள் ஓமோன் செயற்பாடுகளில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. முக்கியமாக உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புப் படிவுகள் விரதத்தின் போது கரைவதால் உடல் எடை குறைகின்றது. அதி உடற்பருமன் பல நோய்களுக்கும் குழந்தைப் பேறின்மைக்கும் காரணமாகின்றது. எனினும் இலங்கணம் மேற்கொள்ளும் போது உடலின் ஆரோக்கியம், நோய்நிலைகளைக் கருத்தில் கொள்வதும், மருத்துவர்களின் ஆலோசனையுடன் மேற்கொள்வதும் இக்காலத்துக்கு அவசியமானதாகும். இவற்றினாலேயே கந்தசஷ்டி விரதம் தமிழர் மத்தியில் சிறப்புப் பெறுகின்றது.

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உறவினர் சந்திப்பு உண்டு. நல்லவர் உதவியால் நல்ல பலன் பெறுவீர்கள். அலைச்சலுக்கேற்ற பலன் உண்டு. காலையில் நல்ல செய்தி வந்து சேரும். முயற்சியில் நம்பிக்கை ஏற்படும்.

**இடபம்:** திருப்தியான நாள். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தீயவழியில் அழைத்துச் செல்லும் நண்பர்களை விலக்குங்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மிதுனம்:** மூத்தவர்களுடன் ஒற்றுமை நன்றாக இருப்பதால் அவர்களின் ஆசி உண்டு. தொழிலில் புதிய வாய்ப்பு கிடைக்கும். உற்சாகமான நாள். நல்ல வாய்ப்பு உங்களை தேடிவரும் நாள்.

**கடகம்:** பாராட்டுகள் கிடைக்கும். கவலையில் இருந்து மீளுவீர்கள். பரபரப்பாக செயற்பட்டு மன நிறைவடைவீர்கள். மாலையில் மகிழ்ச்சி கூடும். உங்களுடைய பொறுமைக்கு பலன் உண்டு.

**சிம்மம்:** நல்ல செய்தி ஒன்று வந்து சேரும். உங்களின் மரியாதை உயரும். பாராட்டு கிடைக்கும். உங்களின் பெருந்தன்மை அதிகரிக்கும். முயற்சி ஒன்று நீங்கள் எதிர்பார்த்த பலனை அளிக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் கூடும். நிம்மதி அடைவீர்கள். வெளிநாட்டில் உள்ளவர்கள் முன்னேற்றப் பாதையில் நடைபோடுவீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**துலாம்:** நண்பர் ஒருவரின் செய்கை உங்களின் மகிழ்ச்சியை அதிகரிக்கும். சிலருடன் இருந்து வந்த கருத்துவேறுபாடு இன்று மறையும். செலவுகள் செய்வதால் நன்மைகள் சிறிதளவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** குடும்பம் சம்பந்தமான நிகழ்வில் உறவினர் ஒத்துழைப்பு கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரித்து அது செயல்களில் வெற்றி தரும். முயற்சியால் நல்ல முன்னேற்றத்தை ஒரே நாளில் காண்பீர்கள்.

**தனுசு:** உடன்பிறந்தோருடன் இருந்து வந்த பகை மாறும். உழைப்பை நம்புங்கள். உள்ளன்போடு பழகியவர்கள் கைகுலுக்க முன் வருவார்கள். தாழ்வுமனப்பான்மை தலைதூக்க அனுமதிக்காதீர்கள்.

**மகரம்:** பிறருக்கு கொடுத்த வாக்கை பாடுபட்டு காப்பாற்றுவீர்கள். நல்ல மாற்றம் உண்டாகும். உள்ளத்திலும் குடும்பத்திலும் மகிழ்ச்சி உண்டு. நலம்விரும்பிகளின் ஆலோசனை உங்களுக்கு கைகொடுக்கும்.

**கும்பம்:** அக்கம் பக்கத்து வீட்டாருடன் நல்லுறவு ஏற்படும். உழைப்பினால் ஏற்றம் உண்டு. விருப்பம் ஒன்று நிறைவேறும். பாராட்டுக் கிடைக்கும். கர்வம் அதிகரிக்காமல் கவனம் தேவை.

**மீனம்:** பணியிடத்தில் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். கோபமும், அதிகாரமும் அதிகமாகாமல் கவனம் தேவை. உங்கள் வார்த்தைகளால் ஒருவருக்கு நன்மை உண்டாகும்.

# தேசிய இனங்களை அடையாளப்படுத்தும் தேசியக் கொடிகள்



அகரதன்

ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற சட்டவரைவை தயாரிப்பதற்காக ஞானசார தேரர் தலைமையிலான 13 பேர் கொண்ட குழுவைக் கொண்டதாக ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளது என இலங்கை அர சால் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட சமகாலத்தில், நவம்பர் 21ஆம் திகதியை தமிழர் தேசத்தின் தேசியக்கொடி நாளாக பிரகடனப்படுத்திய அறிவித்தல் ஒன்று நாடுகடந்த தமிழீழ அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கைத் தீவில் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்பதாக இலங்கையின் வர்த்தமானி அறிவித்தல் அமைந்திருக்க, இலங்கைத் தீவில் இரண்டு தேசங்கள் என்ற நிலைப்பாட்டை அனைத்துலக சமூகம் நோக்கி மீளவும் வலியுறுத்தும் வகையில் நாடுகடந்த தமிழீழ அரசு தன் பிரகடனத்தை செய்துள்ளது. 13 ஆவது அரசியல் திருத்தச்சட்டத்துக்கு அமைய அரசியல் தீர்வுத்திட்டம் குறித்தான உரையாடல்கள், தமிழர் அரசியல் பரப்பில் மீண்டும் உரையாடப்பட்டு வருகின்ற நிலையில் தேசியக்கொடி தொடர்பான அறிவிப்பு வெளிவந்துள்ளது. தாயகம், தேசியம், அரசியல் இறைமை என்ற கொள்கையுடன் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தனக்கென உருவாக்கி பயன்படுத்தி வந்த கொடியில் இருந்த 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்ற எழுத்துக்களை நீக்கிவிட்டு, அது தமிழர் தேசத்தின் தேசியக்கொடியாக அறிவிக்கப்பட்டிருந்தது. 1990ஆம் ஆண்டு மாவீரர் நினைவெழுச்சி வாரத்தின் முதல்நாளான நவம்பர் 21ஆம் நாள் இந்தக் கொடியை ஏற்றி, தேசியக் கொடியாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அறிவித்திருந்தார். அந்த நாளே இன்று தேசியக்கொடி நாளாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

### சர்வதேச அங்கீகாரம் பெறுவதில் தேசியக்கொடியின் முக்கியத்தும்

உலகில் பல நாடுகளில் தேசியக்கொடி நாள் பிரகடனப்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது. கனடாவின் வரலாற்றை நோக்கினால் பெப்ரவரி 15ஆம் நாள் கனேடிய தேசியக்கொடி நாளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. சிவப்பு வெள்ளை வண்ணத்தில் மெப்பில் இலை பொதிந்த கொடி நாடாளுமன்றத்தில் முதன்முறையாக ஏற்றப்பட்ட நாளை, கனேடிய தேசியக்கொடி நாளாக 1996ஆம் ஆண்டு கனடாவின் அன்றைய அரசு பிரகடனம் செய்திருந்தது. கனேடியர்களை ஒன்றுபடுத்தும் அடையாளமாகவும், சமத்துவம், பன்முகத்தன்மை, ஒற்றுமை ஆகியவனற்றின் குறி யீடாகவும் இது அமைகின்றது என கனேடிய அரசு தனது பிரகடனத்தில் தெரிவித்திருந்தது.

முப்படை சிப்பாய்களின் அரும்பணிகளையும், தியாகத்தையும் போற்றும் நாளான டிசெம்பர் ஏழாம் நாளை படை வீரர் கொடி நாளாக இந்தியா கடைப்பிடித்து வருகின்றது. 1523 ஜூன் 6ஆம் திகதி கஸ்டவ் வசாவின் முடிசூட்டு விழாவையும், நாட்டின் அரசமைப்பை 1809 ஆம் ஆண்டு ஜூன் 6ஆம் திகதி தத்தெடுத்ததன் காரணமாகவும் சுவீடன் நாட்டின் இராச்சியம் நிறுவப்பட்டதை நினைவூட்டுவதற்காக தனது சுதந்திரத்தை கொடி நாளாக சுவீடன் கொண்டாடுகின்றது. இவ்வாறு உலகின் பல நாடுகள் தமது தேசியக் கொடியின் அரசியல் வர லாற்றை அடிப்படையாகக் கொண்டு தேசியக்கொடி நாளை பிரகடனப்படுத்தி உணர்வெழுச்சியுடன் ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றன.

அதன்வரிசையில் தற்போது தமிழர் தேசத்தின் கொடி நாளை நாடுகடந்த தமிழீழ அரசு தனது அரசவையில் நிறைவேற்றப்பட்ட ஏகமனதான தீர்மானமொன்றின் மூலம் பிரகடனப்படுத்தியுள்ளது. ஈழத்தமிழினம் அரசுக்குரிய ஓர் தேசிய இனம் என்பதன் அடையாளமாகத் திகழப்போகும் இந்தத் தேசியக் கொடி, தமிழர் தேசத்தின் இறைமையினையும், தேசியத்தையும், பண்பாட்டையும், வெளிப்படுத்தி நிற்பதோடு, சுதந்திரமும் இறைமையும் கொண்ட தேசம் ஒன்றை உருவாக்குவதில் உள்ள உறுதியை உலகுக்கு பறைசாற்றி நிற்கும் வகையில் இம்முரசறைவு அமைகின்றது என நாடுகடந்த தமிழீழ அரசு தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது. தமிழர்களுக்கான தேசம் எத்தகைய கொள்கை நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கும் என்பதை வெளிப்படுத்தும் வகையில் 2014ஆம் ஆண்டு முரசறையப்பட்டிருந்த சுதந்திர சாசனத்துக்குப் பின்னராக முக்கியமானதொரு நிகழ்வாக இது அமைந்துள்ளது.

### விடுதலைப்புலிகளின் கொடியாக இல்லை

தமிழீழ விடுதலைப் புலிகளின் தடை நீக்கம் தொடர்பில் பிரித்தானியாவில் நடைபெற்றுவரும் வழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடிக்கும், தேசியக்கொடிக்கும் உள்ள வேறுபாட்டை பிரித்தானிய உள்துறை அமைச்சு சுட்டிக்காட்டியிருப்பதானது தமிழர் தேசத்தின் தேசியக்கொடிக்குக் கிடைத்துள்ள உட்கிடையான அங்கீகாரமாகக் கணிக்கப்படுகின்றது. விடுதலைப் புலிகள் மீதான தடை பிரித்தானியாவில் நீடிக்கப்பட்டு வருவதோடு, விடுதலைப் புலி களை அடையாளப்படுத்தும் கொடிக்கே அங்கு தடை காணப்படுகின்றது. தேசியக்கொடி தொடர்பான பிரித்தானிய அரசின் பார்வை, ஒருவகையில் தமிழர்களை தேசிய இனமாக ஏற்றுக்கொள்கின்றது. இவ்வாறான உட்கிடையான அங்கீகாரங்களை சர்வதேச அரசியல் அரங்கில் கூர்மைப்படுத்தி தமிழர்கள் தேசத்துக்குரிய இனம் என்பதான வெளிப்படையான அங்கீகாரத்தை வென்றெடுப்பதே தமிழர்களின் ஜனநாயக இராஜதந்திரப் போராட்டமாக உள்ளதென அவதானிகள் கூறுகின்றனர்.


“ இன்றைய உலகில் நாடுகளற்ற பல தேசிய இனங்களின் அடையாளமாக அவர்கள் தேசியக் கொடிகளே காணப்படுகின்றன. நாடுகளாக அங்கீகரிக்கப்பட்ட இன்றைய உலக வரைபடத்தில் அந்த நாடுகளுக்குள் வாழ்கின்ற பிராந்தியங்கள், தேசிய இனக்குழுக்கள் தமக்கான ஓர் கொடியின் மூலம் தங்களை அடையாளப்படுத்தி வருவதையும் காணக்கூடியதாக உள்ளது



### யூதர்கள் தரும் கற்பிதம்



யூதர்கள் தமது வரலாற்றுத் தடத்தில் தமக்கான ஒரு நாட்டை உருவாக்குவதற்கு முன்னரேயே தமக்கான தேசியக் கொடியினையும், தேசிய கீதத்தையும் உருவாக்கியிருந்தனர். யூதர்களுக்கு ஒரு நாடு வேண்டுமென போராடிய யூத சியோனிய விடுதலை இயக்கம், 1891ஆம் ஆண்டு சுவிஸ் ஜெனிவா நகரில் இரகசியான முறையில் நிலக்கீழ் அறையொன்றில் ஒன்றுகூடியபோது தமக்கான தேசத்தை உருவாக்குவதற்கான மூலோபா யங்களையும், தந்திரோபாயங்களையும் வகுத்திருந்தனர். யூதர்களுக்கு ஒரு நாடு வேண்டும் என்ற கொள்கை நிலைப்பாடொன்றை சர்வதேச சக்திகளின் நிலைப்பாடாக எடுப்பதற்கான திட்டங்களை தீட்டியிருந்ததோடு, யூத மக்களை ஒன்றுபடுத்தி அவர்களை வலுமிக்க சக்தியாக திரட்டும் திட்டங்களையும் தீட்டியிருந்தனர். குறிப்பாக இந்த இரகசிய அறை ஒன்றுகூடலில்தான் தமக்கான ஓர்; தேசியக் கொடியையும், தேசிய கீதத்தையும் உருவாக்க வேண்டுமென்ற முன்னெடுப்பைத் தொடங்கியிருந்தனர். அவ்வாறு உருவாகிய தேசியக் கொடியும், தேசிய கீதமும் பின்னாளில் இஸ்ரேல் என்ற நாடு உருவாகிய பின்னர் பிரகடனப்படுத்தப்பட்டது. பலஸ்தீனியர்கள் மீதான இஸ்ரேலின் இனப்படுகொலை இரத்தம் தோய்ந்த வரலாறாக இருந்தாலும், மறுபுறம் யூதர்களின் இந்த வரலாற்று வழித்தடங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியதாகவுள்ளன.



பலஸ்தீன தேசம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருப்பது போல் தமிழர் தேசம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருப்பதோடு, நில அபகரிப்புக்களுக்கும் முகம்கொடுத்து வருகின்றது.

பெரும் இனஅழிப்புக்கு முகம் கொடுத்து, தற்போது கட்டமைக்கப்பட்ட இனஅழிப்புக்கு முகங்கொடுத்து வருகின்றதான குரல்கள் உள்ளேயும் வெளியேயும் ஒலித்து வருகின்றன. நீதிக்காகவும் அரசியல் இறைமைக்காகவும் தமிழர் தேசம் போராடிவரும் நிலையில், இலங்கைத் தீவில் தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதை நீக்கம் செய்து, அவர்களை 'சிறுபான்மை இனக்குழுவாக' அடையாளப்படுத்துகின்ற போக்கே காணப்படுகின்றது. ஐ.நா. போன்ற பல நிறுவனங்களின் அறிக்கைகளிலும் தமிழர்களை சிறுபான்மை இனமாக அடையாளப்படுத்தும் போக்கைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இன்றைய உலகில் நாடுகளற்ற பல தேசிய இனங்களின் அடையாளமாக அவர்கள் தேசியக் கொடிகளே காணப்படுகின்றன.

நாடுகளாக அங்கீகரிக்கப்பட்ட இன்றைய உலக வரைபடத்தில் அந்த நாடுகளுக்குள் வாழ்கின்ற பிராந்தி யங்கள், தேசிய இனக்குழுக்கள் தமக்கான ஓர் கொடியின் மூலம் தங்களை அடையாளப்படுத்தி வருவதனையும் காணக்கூடியதாக உள்ளது என்றால் அதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை.

# ஆனந்ததேரரின் நியமனத்துக்கு மாணவர்கள் சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, நவ. 5

கொழும்பு பல்கலைக்கழக புதிய வேந்தராக முருத்தெட்டுவே ஆனந்த தேரர் நியமிக்கப்பட்டமைக்கு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னணி மாணவர் சங்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு மேற்படி மாணவர் சங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பல்கலைக் கழகத்தின் வேந்தர் பதவியானது எந்த ஒரு பல்கலைக்கழகத்திலும் மிகவும் மதிப்புமிக்க மற்றும் மிக உயர்ந்த பதவியாக கருதப்படுகிறது.

வேந்தருக்கு சட்டபூர்வ நிர்வாக அதிகாரங்கள் இல்லை என்றாலும் வேந்தர் பல்கலைகழகத்தின் கௌரவத்தின் சின்னமாக இருக்கிறார். அதனால்தான் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாக்களில் பட்டங்கள் வழங்குவது உட்பட கௌரவ சந்தர்ப்பங்களில் வேந்தர் கௌரவிக்கப்படுகிறார்.

இந்த நிலையில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தராக முருத்தெட்டுவே ஆனந்த தேரரை அரசாங்கம் நியமித்துள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக மாணவர் சங்கம், ஒட்டு மொத்த மாணவர்களும் இந்த நியமனத்தை ஏகமனதாக எதிர்க்கின்றோம்.

ஏனென்றால் பல்கலைக் கழகத்தின் வேந்தர் பதவி என்பது அரசியல் நியமனமாகவோ அல்லது அரசியல் நிகழ்ச்சி நிரலாகவோ இருக்கக்கூடாது. இந்தப் பின்னணியில்தான் பல்கலைக் கழக நிர்வாகத்தின் சுதந்திரமும், கண்ணியமும் காக்கப்படுகிறது. ஆனால் பல்கலைக்கழகத்தின் வேந்தர் பதவிக்கான அரசியல் நியமனம் பல்கலைக்கழக நிர்வாகத்தின் சுதந்திரம் மற்றும் பல்கலைக்கழகத்தின் கௌரவம் ஆகிய இரண்டையும் அழித்துவிடும்.

எனவே பல்கலைக்கழக வரலாற்றில் புகழ்பெற்ற வரலாற்றைக் கொண்ட, இன்றும் கௌரவமிக்க பல்கலைக்கழகமாக விளங்கும் கொழும்பு பல்கலைக் கழகத்துக்கு இந்த அரசியல் நியமனம் வழங்கப்படுவதற்கு மாணவர்கள் ஒன்றியம் என்ற வகையிலும் முழு மாணவர் அமைப்பின் சார்பிலும் எமது கடும் எதிர்ப்பை தெரிவித்துக் கொள்கிறோம். -என்றுள்ளது. (ம)



## யானை வேலிக்கு பதிலாக பனம் விதைகள் நடுகை

வவுனியா, நவ.5

வவுனியா கிறிஸ்தவகுளத்தில் பனை அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் கமநல சேவைகள் திணைக்களத்தின் ஊடாக யானை வேலிக்கு பதிலாக பனம் விதைகளை நடும் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தத் திட்டத்தில் முதற்கட்டமாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் பனம் விதைகள் நடப்பட்டன.

நிகழ்வில் பனை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் கிருசாந்த பத்திராஜா, வவுனியா மாவட்டச் செயலர் சரத் சந்திர, செட்டிகுளம் உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.தர்மேந்திரா மற்றும் பனை அபிவிருத்தி சபையின் பொது முகாமையாளர் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மேலும் தேனீ வளர்ப்பதன் மூலம் யானையை விரட்ட முடியும் என்ற செயற்பாட்டுக்காக பரீட்சார்த்தமாக 10 பயனாளிகளுக்கு தேனீ வளர்ப்பு கூடுகளும் வழங்கப்பட்டன. (ச-110)

## விபத்தில் இருவர் காயம்

வவுனியா, நவ.5

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா புகையிரத நிலைய் வீதியிலிருந்து குருமன்காடு நோக்கி பயணித்த இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-110)

## வலிகாமம் வடக்கு காணிகள் விரைவில் விடுவிக்கப்படும்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.5

வலி.வடக்கில் உள்ள பொது மக்களின் காணிகளை படிப்படியாக விடுவிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் காணி அல்லாத மக்களுக்கு அரச நிதியில் பெற்றுக் கொடுக்கப்பட்ட 186 பேரது காணிகளின் உறுதிப்பத்திரங்களை பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி வடக்கில் மக்களுடைய சுமார் 3ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன. அதே வேளை வடக்கில் சுமார் 900 க்கும் மேற்பட்ட நிரந்தர நியமனம் அல்லாத சுகாதாரத் தொண்டர்களின் விவரங்களும் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியை ஏற்றுக் கொள்ள முடியாது.

மக்களுக்குத் தேவையான அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுக்கத் தயாராக இருக்கிறேன். என்றார். (ஒ-4-20)

## கந்தசஷ்டி உற்சவம்

கொடிகாமம், நவ.5

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகப்பெருமான் ஆலயத்தில் கந்தசஷ்டி உற்சவம் தினமும் பி.ப 1.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி பூசையைத் தொடர்ந்து முருகப் பெருமான் வீதிஉலா வரவுள்ளார்.

விரத ஆரம்ப நாளான இன்று கலாவித்தகர் அமிர்தசிந்துஜன் தலைமையில் இசைப் பயிலக மாணவர்களால் திருப்புகழ் பா நிகழ்த்தப்படவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி காலை 10 மணிக்கு அபிஷேகம் இடம் பெற்று மாலை 2 மணிக்கு பூசை ஆரம்பமாகி தொடர்ந்து சூரசம்காரம் இடம்பெறவுள்ளது.

விரதம் இருக்கும் அடியார்கள் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப் பட்டுள்ளது. (ச-159)



## பனம் விதைகள் நடுகை

புங்குடுதீவு, நவ.5

புங்குடுதீவு- குறிச்சிகாடு, கண்ணகை அம்மன் வளைவு தொடக்கம் கரந்தலி வேளாங்கண்ணி மாதா சொரூபச் சந்தி வரையான தார் வீதியின் இருமருங்கிலும் அண்மையில் பனம் விதைகள் நடப்பட்டன.

உலகமைய ஒருங்கிணைப்பாளர்களின் நிதியுதவியில் இந்தச் செயற்பாடு இடம்பெற்றது. (ச)

## உற்பத்தி நிலையங்கள் திறப்பு

பச்சிலைப்பள்ளி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தால் தேங்காய் எண்ணெய் ஆலை மற்றும் தும்பு உற்பத்தி நிலையம் ஆகியவை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சர் இந்திக்க அனுருத்த ஹேரத் மற்றும் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொண்டு நிலையங்களை திறந்து வைத்தனர். (ஒ-ரி1-9)

## பாடசாலை திறன் வகுப்பறை, பேருந்து நிழற்குடை திறப்பு



புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை, பாடசாலைக்கான பேருந்து நிழற்குடை மற்றும் அன்பளிப்புப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 2ஆம் திகதி நடைபெற்றது.

பேராசிரியர் கா.குகபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் புங்குடுதீவு இறுப்பிட்டி கல்வி சமூக அறப்பணி நிதியத்தின் நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவக வலயப் பணிப்பாளர் தி.ஞானசுந்தரம் திறந்து வைத்தார். இறுப்பிட்டி அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையில் அமைக்கப்பட்ட பேருந்துத் தரிப்பிட நிழற்குடையை ச.தனபாலசிங்கம் திறந்து வைத்தார். (ச-20)

## முன்னாள் போராளிக்கு வாழ்வாதார உதவி



கிளிநொச்சி, நவ 5

முல்லைத்தீவு, திருமுறிகண்டியில் வசிக்கும் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டு சக்கர நாற்காலியின் உதவியுடன் செயற்படும் முன்னாள் போராளிக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது. புலம்பெயர் உறவுகள் சிலரின் நிதிப்பங்களிப்பில் வாழ்வாதார உதவியாக சிறு கடையொன்று அமைத்து அண்மையில் வழங்கப்பட்டுள்ளது. (ச-13)

# ஆலயத்துக்குரிய காணியில் நெற்செய்கைக்குத் தடை

முல்லைத்தீவு,நவ.5

துணுக்காய் ஆரோக்கியபுரம் கிராமத்தில் உள்ள பிள்ளையார் ஆலயத்துக்கென ஒதுக்கப்பட்ட சுமார் 1 ஏக்கர் காணியில், இம்முறை காலபோக நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிள்ளையார் ஆலயம் முல்லைத்தீவு மாவட்டத்திலும், ஆலயத்துக்கு ஒதுக்கப்பட்ட காணி கிளிநொச்சி மாவட்டத்திலும் அமைந்துள்ளன.

கடந்த 5 ஆண்டுகளாக குறித்த காணியில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதில் பெறப்பட்ட வருமானம் ஆலயத்துக்கே வழங்கப்பட்டது.

தற்போது பயிர்ச்செய்கை மேற்கொள்ள கமநல சேவை நிலையம் அனுமதிக்கவில்லை.

இது தொடர்பாக கரைச்சி பிரதேச செயலாளரிடம் முறையிடவுள்ளோம் என்று ஆரோக்கியபுரம் மக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-4-13)

## முன்பள்ளிக் கட்டடம் திறப்பு

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் அமைக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டடம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைத் தவிசாளர் சுரேன் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொண்டு முன்பள்ளிக் கட்டடத்தினைத் திறந்து வைத்தார். (ஓ-ரி-ஓ)

## மரண அறிவித்தல்

அன்னையின் மடியில் 20.10.1958



ஆண்டவன் அடியில் 03.11.2021

### திரு.மாணிக்கம் சிறீஸ்கந்தராஜன் (சிவா-சிறீ)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் பிரான்சில் வசித்து வந்தவரும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமாகிய மாணிக்கம் சிறீஸ்கந்தராஜன் 03.11.2021 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் சௌந்தரநாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மருமகனும், இராசமலர் (பிரான்ஸ்) இன் அன்புக் கணவரும், நல்லம்மா, காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், தேவராஜா, மிதுலாவதி, மற்றும் புவனதாசன் (கனடா) ஆகியோரின் சகோதரரும், சீவரட்ணம் (கனடா), செல்வமலர் (நோர்வே), யோகமலர் (பிரான்ஸ்), ஞானமலர் (பிரான்ஸ்), காலஞ்சென்ற வீரசிங்கம், புவனேஸ்வரி, சரோஜினிதேவி, காலஞ்சென்ற சண்முகநாதன், மகேஸ்வரி, ஆகியோரின் மைத்துனரும், ரதீஸ்வரி, காலஞ்சென்ற கனகசுந்தரம், சண்முகநாதன், சச்சிதானந்தம் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும், ஜெனனி (பிரான்ஸ்), ஜெனிலா (பிரான்ஸ்), கீர்த்திகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சர்வினின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (05.11.2021) வெள்ளிக்கிழமை பப்பாச்சி மலர்சாலையில் (மணிக்கூட்டு கோபுரம் அருகாமை) வைக்கப்பட்டு, பி.ப 3.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 959 7115**
**033605539931 - மனைவி (பிரான்ஸ்)**

**தகவல் : குடும்பத்தினர்.**

(CS 17939) 1-6

## சேவைநலன் பாராட்டு




**வேட்டில்லாதிலக பத்திநாதர்**

**அவர்கள்**

யாழ் போதனா வைத்திய சாலையில் 37 வருடங்களாக பொறுப்புத் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும் திருமதி வேட்டில்லாதிலக பத்திநாதர் அவர்களது சேவையை பாராட்டுவதோடு ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாராட்டி வாழ்த்துவோர்,**
**தாதியர் நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்**

(CS 40926) (3/6)

## துயர் பகிர்கின்றோம்



எமது நீண்டகால நண்பரும், யாழ் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரியுமான **திரு.ந.பிரேமகுமார்** அவர்களின் அன்புத் மாமியார்

**திருமதி சுப்பிரமணியம் பறுவதம்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறுப்பிட்டி, அரியநாயகன்புலம் பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

**காராளசிங்கம்-கணேசலிங்கம்**
**ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்- வேலணை**
**சோம-சச்சிதானந்தன்**
**ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்- கனடா**

(CS 17938) 01/06

## மரண அறிவித்தல்

மண்ணில் 12 . 11 . 1936



விண்ணில் 04 . 11 . 2021

### சின்னத்துரை தர்மராஜா

**(முன்னாள் CARGO SURVEYOR (கொழும்பு-கோட்டை துறைமுகம்)**
**நிறுவுனர் Hione Research & Development Centre - Jaffna**

பறங்கித் தெரு 2ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் மதவடி ஒழுங்கை யாழ்ப்பாணத்தை (ஐயனார் கோவிலடி) வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தர்மராஜா அவர்கள் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அப்பாத்துரை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், த.மோகனாம்பாள் (ஓய்வுபெற்ற முகாமையாளர்-லக்சல) இன் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சி.பத்மாவதி, சி.சண்முகராஜா (சண்), சி.ஜீவராஜா ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்றவர்களான இ.இரத்தினம்மா, அ.சிதம்பரஈஸ்வரன், அ.தெய்வேந்திரம், அ.சாம்பசிவம், பா.பத்மலட்சுமி மற்றும் அ.கமலவேணி, ச.பாக்கியவதி, காலஞ்சென்ற ஜீ.அக்னஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், த.செந்தில்குமரன் (ஆசிரியர் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), த.நந்தகுமரன் (பொறியியலாளர், ஸ்ரீலங்கா ரெலிகொம், யாழ்ப்பாணம்), த.உமையாள் (காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்/சட்டத்தரணி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செ.சுஜாதா (ஆசிரியை, யா/ கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்), ந.செல்வ அம்பிகை (விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், செ.அஷ்மிதா (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), செ.அபிராம் (யா/இந்துக் கல்லூரி), ந.குருவரன், ந.தேவந்தி (யா/கல்வியங்காடு இ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2021) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் யாழ் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**0777364939**
**0772235646**
**0760887365**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 17940) 1-6

## மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 07 . 1936



இறப்பு 31 . 10 . 2021

### சின்னத்துரை கார்த்திகேசு

சுதுமலை தெற்கைப் (எச்சாட்டி வைரவர் கோவிலடி) பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை கார்த்திகேசு கடந்த (31.10.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை யோகம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும் சிவசம்பு ரத்தினம் தம்பதியினரின் ஆசைமிகு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம், பூபாலசிங்கம் (பாலு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், உதயகுமாரி (பிரான்ஸ்), நந்தகுமார் (சுவிஸ்), வசந்தகுமார் (கனடா), உமாவதனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவதாசன், வனஜா, பார்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பத்மராணி காலஞ்சென்ற ரத்தினசபாபதி மற்றும் தனியாசலம், சிவகுமாரன் ஆகியோரின் மைத்துனனும், நிறோஜன், கீத்திகா, சிந்துஷா, ஷாருசன், சாரங்கன், சயந்தன், சிவனிஷா, அலிஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 40898) (3.6)

# கேள்வி அறிவித்தல்
## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்
## சபைநிதி வேலைத்திட்டங்கள் - 2021

01. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம், அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

02. விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. ஒப்பந்ததாரர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) வீதி / கட்டடம் நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule -5) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர் / செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் (தொலைபேசி : 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2021.11.05 தொடக்கம் 2021.11.19 வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர்/ செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரியில் 2021.11.05 ஆம் திகதியிலிருந்து 2021.11.19 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 2,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தவிசாளர்/ செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரிக்கு 2021.11.19 ஆம் திகதி மாலை 14:30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கீழ்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து தொடர் இலக்கம் 1,5,6,7,8,9 வரையான வேலைகளுக்கு 49 நாட்கள் (2022.01.07 ) வரையும் தொடர் இலக்கம் 2, 3, 4 வரையான வேலைகளுக்கு 63 நாட்கள் (2022.01.21) வரையும் செல்லுபடியாகும்.

09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

10. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2021.11.12 திகதி மாலை 15:00 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக (Mn) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | NP/14/41/(6)/2/C.F/2021/48 | வீதி மின் விளக்குகள் கொள்வனவும் பொருத்துதலும் (சாவகச்சேரிபிரதேசசபை) | 1.39 | 90 | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 14,000.00 | 2022.02.04 |
| 2 | NP/14/41(6)/2/C.F/2021/49 | வீதி பெயர்பலகை பொருத்துதல் | 2.30 | 90 | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 23,500.00 | 2022.02.18 |
| 3 | NP/14/41/(6)/2/C.F/2021/50, 51,52 | கூரை மற்றும் கடை புனரமைப்பு - வரணி பொதுச் சந்தை<br>**சுற்றுமதில் மற்றும் வாகன தரிப்பிடம் நிர்மாணம் - வரணி நூலகம்**<br>**வரணி பொதுச் சந்தை இறைச்சிக்கடை நிர்மாணித்தல் (கட்டம் I) -** | 2.21 | 90 | C8/C7 (கட்டடம் நிர்மாணம்) | 22,500.00 | 2022.02.18 |
| 4 | NP/14/41/(6)/2/C.F/2021/53, 54,55,56. | கச்சாய் நூலக புனரமைப்பு<br>சந்தைக் கடை திருத்தம் - கொடிகாமம்<br>காவலாளி அறை நிர்மாணம் - தலைமை அலுவலகம்<br>களஞ்சியம் அமைத்தல் - தலைமை அலுவலகம் | 2.67 | 90 | C8/C7 (கட்டடம் நிர்மாணம்) | 27,000.00 | 2022.02.18 |
| 5 | NP/14/41/(6)/2/C.F/2021/57, 58,59 | கோணாவளை வீதி புனரமைப்பு - மந்துவில் மேற்கு<br>பாம் வீதி 2ஆம் குறுக்குத்தெரு புனரமைப்பு - மந்துவில் மேற்கு<br>மெய்கண்டான் வீதி ஊரெல்லை வாய்க்கால் மதகு நிர்மாணம் | 1.89 | 90 | C9/C8 (வீதி நிர்மாணம்) | 19,000.00 | 2022.02.04 |
| 6 | NP/14/41/(6)/2/C.F/2021/60, 61,62 | தபாற்குளத்து வீதி நிர்மாணம் - மிருசுவில்<br>கல்யாணப் பிள்ளையார் வைத்தியர் வீதி நிர்மாணம் - மிருசுவில்<br>CCTM 2ஆம் குறுக்கு வீதி (தாட்சாயனி அம்மன் வீதி) நிர்மாணம் - மிருசுவில் | 1.40 | 90 | C9/C8 (வீதி நிர்மாணம்) | 14,500.00 | 2022.02.04 |
| 7 | NP/14/41/(6)/2/C.F/2021/63, 64 | நாவற்குழி நூலக நிலம் புனரமைப்பு<br>நாவற்குழி உபஅலுவலக திருத்தம் | 1.85 | 90 | C9/C8 (கட்டடம் நிர்மாணம்) | 18,500.00 | 2022.02.04 |
| 8 | NP/14/41/(6)/2/C.F/2021/65, 66 | சுற்றுமதில் நிர்மாணம் - கைதடி உபஅலுவலக சிறுவர் பூங்கா<br>கைதடி நூலகத் திருத்தம் | 0.70 | 90 | C9/C8 (கட்டடம் நிர்மாணம்) | 7,500.00 | 2022.02.04 |
| 9 | NP/14/41/(6)/2/C.F/2021/67 | வேம்பிராய் இந்து மயானம் நிர்மாணம் | 1.85 | 90 | C9/C8 (கட்டடம் நிர்மாணம்) | 19,000.00 | 2022.02.04 |


**தலைவர்.**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.**

**2021.11.05**

(CR 5829) (3.6)

## சிறுவன் செலுத்திய சொகுசுக்கார் 4 வாகனங்களுடன் மோதி விபத்து

### ஒருவர் உயிரிழப்பு 4 பேர் காயம்



16 வயதுச் சிறுவன் செலுத்திச் சென்ற சொகுசுக் கார், 4 வாகனங்களுடன் மோதி விபத்துக் குள்ளானது. அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நான்கு பேர் காயமடைந்தனர். இந்த விபத்து நீர்கொழும்பு பிரதான வீதியில் வெலிசர, பொது மயானத்துக்கு அருகில் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது. காயடைந்தவர்கள் ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கொழும்பிலிருந்து நீர்கொழும்பு திசையாகப் பயணித்த அதிசொகுசு கார், வீதியை விட்டு விலகி, எதிர்திசையில் பயணித்த இரு மோட்டார் சைக்கிள்களையும், முச்சக்கரவண்டி மற்றும் கார் ஒன்றையும் மோதி குடைசாந் தது. சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் யணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, அவருடன் பயணித்த மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ,4)

## தமிழக முதலமைச்சருக்கு நன்றி கூறிய சிறிகாந்தா!

கொழும்பு, நவ.5

தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழர்களுக்காக தமிழக அரசு முன்னெடுக்கும் திட்டங்களுக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறிகாந்தா நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

துயரக் கடலில் தொடர்ந்து தவித்துக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர் பால் தாங்கள் வெளிப்படுத்தி நிற்கும் பாசத் துடிப்புக்கும் பரிவுக்கும் எமது மனங்கனிந்த நன்றிகள்.

இலங்கைத் தீவில் வாழ முடியாமல் இந்திய நாட்டுக்கு இடம்பெயர்ந்து தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ள தமிழ் உடன் பிறப்புக்களின் நல்வாழ்வுக்காய் தாங்கள் முன்னெடுத்திருக்கும் சீரிய செயற்றிட்டங்களுக்கு எமது மக்களின் சார்பில் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம். என்றுள்ளது. (எ-இ)


**வீடு வாடகைக்கு**

யாழ் நகருக்கு அண்மையில் சகல வசதிகளுடன் (A/C, தளபாடங்கள்) கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: **077 959 6692** (CS 17936) (1/6)

**பெண் வேலையாள்கள் தேவை**

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை. வயது எல்லை 18 தொடக்கம் 30 வரை வேலை நேரம் காலை 7.30 தொடக்கம் மாலை 5.30 வரை

**074 049 0003** (CS 17933) 3.6

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பம்
வயது 38, நட்சத்திரம் - பூராடம், கல்வி அறிவு குறைந்த மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்கின்றனர்.
மணமகனுக்கு லண்டன் மற்றும் இலங்கை வாழ் இரட்டை பிரஜா உரிமையுண்டு. மணமகனுக்கு தேவயையான பொருளாதார வசதியுண்டு.

விளம்பர இல.: J/F 1031
மே/பா உதயன் கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 02 . 1947



மறைவு 31 . 10 . 2021

## அமரர் புவனேந்திரன் சிதம்பரப்பிள்ளை (ராஜன்)

(முன்னை நாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர் - கொழும்பு)

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் Texas அமெரிக்கா வினை விதிவிடமாகவும் கொண்ட புவனேந்திரன் சிதம்பரப்பிள்ளை அவர்கள் கடந்த (31.10.2021) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையானார்.

அன்னார் காலஞ்சென்ற N.S சிதம்பரப்பிள்ளை (புகையிரத நிலைய அதிபர்) காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அமிர்தநாயகம் தம்பதிகளின் (தெல்லிப்பளை) அன்பு மருமகனும், தயாளம் அவர்களின் அன்புக் கணவரும், பற்றிக், Dr.சாரா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான புஷ்பராஜா சிதம்பரப்பிள்ளை, புஷ்பாராணி திருநாவுக்கரசு (ராணி) மற்றும் புஷ்பாதேவி சிதம்பரப்பிள்ளை (ரஞ்சி - இலங்கை), புஷ்பாஅமிர்தம் சபாரட்ணம் (பபா - இலங்கை), புஷ்பாராகம் அழகரட்ணம் (மனோ - இலங்கை), காலஞ்சென்ற புஷ்பாலயம் சிவகுருநாதன் (ஞானம்), மற்றும் சரோஜினி சுப்பிரமணியம் (பிள்ளை - கனடா), ஸ்டீபன் பூவேந்திரன் (இந்திரன் - கனடா) ஆகியோரின் அன்புக்குரிய இளைய சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.11.2021) வெள்ளிக்கிழமை Immaculate Conception Catholic Church 2255, N.Bonnie, Brae st. Denton Texas 76207 ல் நடைபெற்று நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
ரஞ்சி தம்பிராஜா

Email : kestrel06@outlook.com

(CS 40917) (3/6)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06.08.1939

மறைவு 05.11.2019

அமரர் பண்டிதை
## தில்லைநாயகி இராஜரட்ணம்

(இளைப்பாறிய ஆசிரியர், மானிப்பாய் மகளீர் கல்லூரி)

**திதி : 28.11.2021**

கற்று பல தந்தவள் நீ!!
எம்மில் அதிக பற்று வைத்தவளும் நீ!!
எல்லா குழந்தைகளும் உன் குழந்தை - என
பலதை கற்று கொடுத்தவளும் நீ!!
உன் இனி தருணங்களை - எல்லாம்
எமதாக்கியவளும் நீ!!!

இற்று விடாத இனிய வாழ்வை - எமக்களித்து
அதில் நீ அற்றுப் போனதேன்....?
உனக்கு பின்னாக இன்றும் ஓரிருவரை
நாம் இழந்து தவிக்கின்றோம் தடுமாறி நிற்கின்றோம்
உன் ஆத்மா இறைவன் பாதங்களில்
சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(CS 40925) (3.6)

இராஜ சத்தி
பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை.

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 20.11.1967 மறைவு : 15.11.2020

அமரர்
## குலசிங்கம் சாந்தரூபன்

(வவா)

(நியூரூபன் ரெக்ஸ்ரைல் முதலாளி – உரும்பிராய்)

வாழ்வு தந்த வரம்

ஆண்டு ஒன்று ஆனதென்று
அகமும் புறமும் நம்பவில்லை
மீண்டும் மீண்டும் நினைவுகளாய்
நீங்கள் தான் நீங்கவில்லை
தாண்டிப் போகும் இடங்களெல்லாம்
தாரணி பிள்ளைகள் என்றழைக்கிறீர்கள்
நீண்டு செல்லும் நினைவுகளால்
நெஞ்சம் தினம் அழுகிறது
வேண்டி விரும்பி பெற்ற தெய்வம்
இடையில் எம்மை பிரிந்ததுவே
ஆண்டியாக நிற்கின்றோம்
அப்பா உங்கள் அன்பு இழந்து
சீண்டிப் பார்த்து செல்கிறது சிரிக்கும்
உங்கள் நகைச்சுவைகள்
தாண்டிப் போக முடியவில்லை
தாரணி பிள்ளைகளை நினைத்தேனும்
தரணிக்கு வாருங்கள்.

கோப்பாய் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

என்றும் உங்கள் நினைவுகளோடு வாழும்
மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர்

(CS 40845) (3/6)

## வெடுக்குநாறி...

வவுனியாவுக்கு நேற்றுப்பயணம் மேற்கொண்ட அவர், ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நெடுங்கேணி வெடுக்குநாறி மலை தொடர்பான விடயம் நீதிமன்றில் இருக்கின்றது. எனவே, அந்தப் பிரச்சினையில் நாம் ஏனைய பணிகளை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனினும், ஒலிபெருக்கியை பயன்படுத்துவதற்கான அங்கீகாரத்தை நாம் வழங்கியிருந்தோம். ஆனால், அதிலும் சில இடைஞ்சல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடம். அங்கு அண்மைக்காலமாகவே இந்துக்கோவில் என்ற வகையில் பூசைகள் நடைபெற்றுவருகின்றன என்று அறிகின்றோம். இதற்கு முன்னர் பௌத்தவிகாரைகளின் சிதைவுகள் அங்கு காணப்படுகின்றமை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஆனால், இனங்களுக்கிடையேபிளவை ஏற்படுத்தாத வகையில் ஐக்கியத்தை ஏற்படுத்தும்வண்ணம் இந்த விடயத்தைப் பார்க்கவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை நாம் செய்வோம்.

இலங்கையில் எந்தவொரு பிரதேசத்துக்கும்சென்று குடியிருப்பதற்கான தகுதி ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. அதில் எந்தத்தடையும் இல்லை. இங்கு முன்னெடுக்கப்பட்ட அகழ்வுகள் மூலம் பௌத்தவிகாரை இருந்திருப்பதற்கான எச்சங்களை நாம் காண்கின்றோம். அதேபோல இந்து சமயத்துக்குரிய சில விடயங்களையும் அங்கு காண்கின்றோம்.

இலங்கையில் பௌத்த விகாரைகள் அமையப்பெற்றுள்ள இடங்களில் இந்துக் கடவுள்களுக்கான பூசைகளும் நடைபெற்றுவருகின்றன.

எனவே, அவ்வாறு இன ஐக்கியத்தோடு இருக்கும் நடைமுறைகளையும், செயற்பாட்டையும் எதிர்காலத்தில் நாங்கள் ஏற்பாடுசெய்வோம். அந்தப் பிரதேசத்துக்குள் பிரவேசிப்பதனை தடுக்க வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் அடாத்தாக கட்டட நிர்மாணங்கள் அங்கு ஏற்படுத்தப்படுகின்றமை தடைசெய்யப்படவேண்டிய ஒரு விடயம்.

அத்துடன் அந்தப்பிரதேசத்தில் இருக்கக்கூடிய புராதன சொத்துக்களை பாதுகாக்கவேண்டிய தேவை இருக்கின்றது. தொல்பொருள்திணைக்களம் என்றவகையில், அந்தப்பொறுப்பு எமக்கிருக்கின்றது. அதற்காகவே இந்த தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இனிவரும் காலங்களில் ஏற்பாடுகள் முழுமையாகச் சீர்செய்யப்படும்- என்றார். (த-110)

## இந்தியாவிலிருந்து...

பட்டது.

அதிகாலை ஒரு விமானத்தி லும் முற்பகல் மற்றொரு விமானத்திலு மாக 100 தொன் நனோ நைட்ரஜன் யூரியா திரவ உரம் கொண்டுவரப்பட்டது. (த-இ)

## 592 பேருக்கு...

ரைவிட அதிகரித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 43 ஆயிரத்து 385 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் நாட்டில் மேலும் 354 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். அதற்கமைய இது வரை 5 இலட்சத்து 14 ஆயிரத்து 234 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் மேலும் 15 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 08 ஆண்களும், 07 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 806 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

## மண்ணித்தலை...

பட்டன.

தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அந்தப் பணியை ஆரம்பித்துவைத்தார்.

இந்நிகழ்வில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ. அங்கஜன், இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி. நிஷாந்தி ஜெயசிங்க, இலங்கை தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க, கிளிநொச்சி மாவட்ட செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (த-27)

## 13ஆவ்...

மேலும் தெரிவிக்கையில்,

இன்று (நேற்று) நரகாசுரனை வதம் செய்த தீபாவளித் திருநாள். ஆனால் நம்மைச் சுற்றி நரகாசுரன்கள் பலர் இருக்கிறார்கள்.

ஐ.சி.சி. தமிழர்களின் இனப்படுகொலை வழக்கை பரிசீலித்து வருகின்றநேரத்தில், தமிழர்கள் சரியான நேரத்துக்காகக் காத்திருக்க வேண்டும்.

இனப்படுகொலையாளிகள் மீது சர்வதேச குற்றங்கள் சுமத்தப்படும்போது பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள் விரும்பியவாறு அரசியல் உரிமைகளை கோர முடிந்தது.

தென் சூடான், கிழக்கு திமோர், பொஸ்னியா மற்றும் இனப்போர் நடந்த பிற நாடுகளில் இவைகள் நடந்தன. சி. வி. விக்னேஸ்வரன் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சர்வஜன வாக்கெடுப்பு கோரினார். இப்போது சர்வஜன வாக்கெடுப்பை கைவிட்டு சமஷ்டி நிலை கேட்கிறார். தமிழர்களை குழப்ப வேண்டாம் என்று அவரைக் கேட்டுக் கொள்கிறோம்.

அரசியல் தீர்வுக்கான வாக்கெடுப்பு என்ற தேர்தல் வாக்குறுதியுடன் அவர் நிலைத்திருக்க வேண்டும். இனப்படுகொலைகள் மீண்டும் நிகழாமல் தமிழர்களைப் பாதுகாப்பது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் கடமை.

யாழ்ப்பாணத்தில் கட்சிகள் ஒன்று கூடி 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவை வலியுறுத்தின. கடந்த 34 ஆண்டுகளாக இலங்கையின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியா இலங்கையை வற்புறுத்தவில்லை என்பதை இந்தக் கட்சிகள் அறிந்துகொள்ள வேண்டும். 13ஐ நடைமுறைப்படுத்துமாறு இந்தியா இலங்கையிடம் ஒருபோதும் வற்புறுத்தாது.

13ஆவது திருத்தச்சட்டம், சிங்கள அடக்குமுறை மற்றும் ஆக்கிரமிப்பிலிருந்து எம்மைப் பாதுகாக்காது. - என்று தெரிவித்தனர். (த-110)

## கிரிக்கெட்...

யில் விடுவிக்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். யாழ். நாவாந்துறை பகுதியில் கடந்த 11ஆம் திகதி கிரிக்கெட் விளையாடியபோது ஓட்ட எண்ணிக்கை தொடர்பாக ஏற்பட்ட தர்க்கம் கைகலப்பாகியதால் விக்கெட்டுக்களால் தாக்கப்பட்ட 14 வயதுடைய சிறுவன் காயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். இது தொடர்பில் யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப்பிரிவினரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளைமேற்கொண்ட குற்றத்தடுப்பு பிரிவினர் சம்பவத்துடன் தொடர்புபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த இரண்டு நாள்களாக 11 பேரை கைதுசெய்திருந்தனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிவானின் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர். (த-20)

## விலைக்....

கொள்கையொன்றைக் கொண்டிருக்க வேண்டும்" என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் பொருள்களின் விலை, நூல் அறுந்த பட்டம் போல உயர்ந்து வருகின்றது. பொருள்களின் விலையில் கட்டுப்பாடு இல்லையென்றால், அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதத்துக்குள், மீட்க முடியாத சோகமான இடத்துக்கு நாடு தள்ளப்படுவதைத் தவிர்க்க முடியாது.

விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளநிலையில், விவசாயிகளுக்கு பணம் கொடுப்பதன் மூலமாக பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. தற்போது விவசாயிகள் தமது சொந்த உபயோகத்துக்காக பயன்படுத்தும் சீனி, மா மற்றும் எரிவாயு போன்ற பெரும்பாலான பொருள்களின் விலை வேகமாக உயர்ந்துள்ளது. இதனால் நாடு முழுமையான நெருக்கடியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. - என்று தெரிவித்தார். (த-இ)

## போதைப்பொருள்களுடன்...

கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது இருவரும் கைதாகினர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 2 கார்கள், 200 கிராம் கஞ்சா போதைப்பொருள், 50 பெட்டிகளில் அடைக்கப்பட்ட போதைப்பொருள் மாத்திரைகள் மற்றும் 150 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்கள் இருவரும் 32 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர்கள் போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்புகளைப் பேணினர் என்று விசாரணைகளை அடிப்படையாகக்கொண்டு பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-125)

## ஹைஏஸிலும்...

ஸார் நேற்றுக் கைதுசெய்தனர்.

வவுனியாவிலிருந்து மாதகல் பகுதிக்கு வந்து கஞ்சாவை கொள்வனவு செய்து செல்கின்றார் என்று இளவாலை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அவரைச் சோதனையிட முற்பட்ட போது, வாகனத்தை நிறுத்தாது தப்பியோடியுள்ளார்.

அந்த வாகனத்தை பொலிஸார் கலைத்துச்சென்று தெல்லிப்பழை பகுதியில் மடக்கிப்பிடித்தனர். வாகனத்தை சோதனைக்கு உட்படுத்தியபோது இரண்டு கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-125)

## 'ஐஸ்'...

ஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 250 கிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. கைதான இருவரும் புத்தளம் மற்றும் சிலாவத்துறையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அதன்பின்னர் நீதிமன் றில் முற்ப டுத்தப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மன்னாரில் நேற்றுமுன்தினம் கஞ்சா போதைப்பொருடன் மாணவன் ஒருவர் கைதானார். அவர் மட்டுமன்றி, வாகனம் ஒன்றில் கஞ்சா கடத்தியபோது கழுதையுடன் மோதி விபத்துக்குள்ளாகிய நபரும் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-60)





# தலைமன்னார் வெள்ளத்தில்!

மன்னார், நவ. 5

மன்னாரில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் கடும்மழை காரணமாக தலைமன்னார் கிராமத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த சில தினங்களாக பெய்து கொண்டிருக்கும் கடும்மழை காரணமாக மழை நீர் வெளியேற முடியாமல் வீட்டு வளவுகளுக்குள் தேங்கி நிற்கின்றது. வெளியிடங்களில் இருந்துவந்த குப்பைகளும் கழிவுத் தண்ணீரும் எங்களுடைய வீட்டு வளவுகளுக்குள் தேங்கி நிற்கின்றன. இதனால் நோய்த்தொற்று ஏற்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து நிலைமையைச் சீர்செய்ய வேண்டும் - என்றனர். (ம-213)

# கட்சிகளின் கலந்துரையாடலில் தமிழரசுக் கட்சியும் வேண்டும்!

## மனோ கணேசன் தெரிவிப்பு



**கொழும்பு, நவ.5**

**தமிழ், முஸ்லிம் கட்சிகளின் கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் பங்கேற்க வேண்டும் என நானும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நண்பர் ரவுப் ஹக்கீமும் வலியுறுத்தினோம். அதை அந்த உரையாடலில் கலந்துக்கொண்ட எல்லாக் கட்சிகளும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டார்கள்.**

இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டுமல்ல, இந்தப் பொது நோக்கில் இணைந்து செயற்பட விரும்பும் அனைத்துத் தமிழ், முஸ்லிம் கட்சிகளும் ஒரு தளத்தில் அமர்ந்து பேசுவது ஆரோக்கியமானதே என எண்ணுகிறேன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி பிரதானமான கட்சி என்பதால், முதலில் அந்த கட்சி உள்வாங்கப்பட வேண்டுமென்றும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் தொடர்ந்து நிகழ வேண்டும் எனவும் நான் விரும்புகிறேன்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த உரையாடல் ஏற்பாட்டை தமிழீழ விடுதலை இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதனதும், அவரது கட்சியினதும் இந்த முன்முயற்சி பாராட்டுக்குரியது எனவும் நான் எண்ணுகிறேன். இத்தகைய உரையாடல் தமிழ் கட்சிகள் மத்தியில் ஐக்கியத்தை மேன்மேலும் வலுப்படுத்த வேண்டும்.

அதைவிடுத்து அதன் மூலம் பிளவுகள் அதிகரிக்குமானால், இத்தகைய முயற்சிகளில் பங்குபற்றி கால விரயம் செய்ய தமிழ் முற்போக்கு கூட்டணியாக நாம் விரும்ப மாட்டோம்- என்றுள்ளது.

(எ-இ)

# சூத்திரதாரிகளை பிடிக்காது சேறு பூச முயல்கிறது அரசு!

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



கொழும்பு, நவ.5

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் பல்வேறு சதிகாரர்கள் பல்வேறு சேறு பூசுதல் மற்றும் சதிகளை முன்னெடுத்து வருகின்றனர். ஆதாரமற்ற அபத்தமான குற்றச்சாட்டுகளை முன்வைத்து எனது நற் பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயல்கின்றனர்.

இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று கொழும்புப் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பு கொழும்பு பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. அந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது ஈஸ்டர் தாக்குதல் நடந்தவுடனே, அதுபற்றி விசாரித்து, தாக்குதல் நடந்த தேவாலயங்களை சீரமைக்க உடனடியாக நடவடிக்கை எடுத்திருந்தேன். இந்தத் தாக்குதலின் சூத்திரதாரிகளாகச் செயற்பட்டவர்களைக் கைது செய்து கடுமையாகத் தண்டிக்க வேண்டும். ஆனால் அதைச் செய்வதற்குப் பதிலாக அரசு பல்வேறு சதிகளை மேற்கொள்கின்றது.

புலனாய்வுப் பிரிவின் தலைவர்களுடன் எனக்கு எந்தவிதத் தொடர்பும் இருந்ததில்லை. அவர்களின் அறிவுரைகளை ஏற்று அரசியலில் ஈடுபடும் பழக்கம் எனக்கு இல்லை. இந்த ஈஸ்டர் தாக்குதலின் உண்மை நிலையை நாட்டுக்கு வெளிப்படுத்தாதவரை நாடு முன்னேற்றமடையாது. இந்தத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அதற்காக ஐக்கிய மக்கள் சக்தி நிபந்தனையின்றி முன் நிற்கும். என்றார்.

(எ-இ)


IELTS New Batch
Life Skill - A1
By.B.MURALI, BA (Eng), MEd,MSc (UK)
Fee: மாணவர்களுக்கான விசேட சலுகை
53, சிவகுருநாதர் வீதி, Brown Rd. 077 798 9830
(CS 40913) (1-6)

ENGLISH ஆங்கிலம்
பிரத்தியேக வகுப்புக்கள்
உங்கள் வீட்டிற்கு வந்து
கற்பிக்கப்படும்.
077 658 9443 யாழ்ப்பாணம்
(CS 17932)(3.6)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோயில் வடக்கு பிரதான வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
(பலாலி வீதியிலிருந்து 600 M தூரம்)
077 6234 204
077 2880 152
(CS 17937) 1-6

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் மானிப்பாய் சமுர்த்தி வங்கி வீதியில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு, 14 அடி பாதையுடன் மருதடி விநாயகர் கோவிலில் இருந்து 700M தூரம்.
பார்வையிடும் நேரம் :காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.
● தரகர் தேவையில்லை.
● விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 814 7389, 077 614 7333
(CS 17927) 1-6

மரண அறிவித்தல்



கந்தையா யோகேஸ்வரன் (ஈசன்)

காரைநகர் களபூமி விளானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா யோகேஸ்வரன் (ஈசன்) நேற்று (04.11.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் தனவதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் பத்மாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும். சிவகௌரி அவர்களின் அன்புக் கணவரும், தர்சிகா, பிறேமரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும். பரமேஸ்வரன் (பெரியராசன் - லண்டன்) அவர்களின் பாசமிகு சகோதரனும், சாந்தினி (லண்டன்), விக்கினேஸ்வரன் (லண்டன்), சிவகங்கா, சிவஅம்பிகை, பவானி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ரட்சகன் (அருண் - லண்டன்) அவர்களின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அன்னாரது விளானை இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விளானை,
களபூமி, காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்
பரமேஸ்வரன் (சகோதரன் - 077 0084 344)
(CS 17931) (3/6)